

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி


மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 மார்ச் 13 - 19 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 49




## போரை நிறுத்திடுக!

உக்ரைனில் தற்போது நடைபெற்று வரும் இராணுவத் தாக்குதல் உலக அரங்கின் மையப் பகுதியை ஆக்கிரமித்துள்ளது. உக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்களில் நடைபெற்று வரும் >>>



ப 08

## மதம்

“மதம் மக்களுக்கு கொடுக்கப்பட்ட அபினி”, “அடக்கப்பட்ட மக்களின் பெருமூச்சு”, “யதார்த்தம் பற்றிய வினோதமான பிரதிபலிப்பு”– இவைதான் மதம் பற்றிய மார்க்சிய நிலைப்பாடு. இந்த >>>



ப 05

## 7.5% இடஒதுக்கீட்டை...

அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில், அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு அரசியல் சட்ட ரீதியாக செல்லுபடியாகுமா? என்ற கேள்வியை >>>



ப 03




# ரஷ்யா – உக்ரைன் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி


# ஆர்ப்பாட்டம்

**உலகையே** பதட்டத்திற்குள்ளாக்கி வரும் ரஷ்ய உக்ரைன் போரை நிறுத்த வலியுறுத்தியும், இருநாடுகளும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தியும் ஐ.நா.சபை நேட்டோ இராணுவ முகாமை கலைக்க வலியுறுத்தியும், தமிழக இந்திய மாணவர்களை காப்பாற்ற ஒன்றிய அரசும், தமிழக அரசும் எடுக்கும் முயற்சிகளுக்கு ஐரோப்பிய நாடுகள் முழு ஒத்துழைப்பு அளிக்க கோரியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில் மார்ச் 07 அன்று சென்னை கலெக்டர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.ஹெச்.வெங்கடாச்சலம், மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மற்றும் வடசென்னை, தென்சென்னை, மத்திய சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டச் செயலாளர்கள் முன்னணி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## எதிரும் புதிரும்

நேட்டோவில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளுமாறு இனி வலியுறுத்தப் போவதில்லை

– அதிபர் வோல்டிமிர் ஜெலன்ஸ்கி







## கோவையில்...

ரஷ்யா – உக்ரைன் போர் நிறுத்தப்பட்டு, சுமூகத் தீர்விற்கான பேச்சுவார்த்தை தொடரவும், உக்ரைனில் படிக்கும் இந்திய மாணவர்களை மீட்கும் நடவடிக்கைககள் துரிதடுத்தவும் கோரி கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ் நாடு கலை இலக்கியப் பெரு மன்றத்தின் மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்தார்.

இஸ்கப் மாநிலப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன் போருக் கான பின்னணியை விளக்கி உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆறுமுகம், ஏஐடியுசி சங்கங் கள், தமிழ்நாடு விவசாய சங்கம், அனைத்திய மாணவர் பெருமன்றம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

இஸ்கப் மாவட்டச் செயலாளர் எம்.வி.ராஜன் நன்றி கூறினார்.




# அடுத்த கட்ட பணிகள் நோக்கி...



**பேரன்புமிக்க தோழர்களே!**

**நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தல்கள் முடிந்தும், முடியாத நிலையும் உள்ளது.**

மாநகராட்சி, நகராட்சி, பேரூர் அமைப்புகளுக்கான உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

மாவட்ட அளவில் பேசி உடன்பாடு கண்டவைகளில் சில இடங்களில் போட்டி வேட்பாளர்கள் மற்றும் எதிர்த்தரப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாக நிலைகள் மேற்கொண்டது போன்றவற்றால் வெற்றிபெறும் இடங்களின் எண்ணிக்கை குறைந்தது.

மார்ச் 4ஆம் தேதி நடைபெற்ற தலைவர்களுக்கான மறைமுகத் தேர்தலில் நமது கட்சிக்கு உடன்பாடு கண்ட இடங்களில் பல இடங்களில் திமுக மற்றும் தோழமை கட்சிகளின் உதவியோடு வெற்றி பெற்றோம்.

சில இடங்களில் ஒத்துழைப்பு கிடைக்காத நிலையில் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களாக தேர்வாக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவை குறித்து திமுக தலைவரும், முதலமைச்சருமான மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

முதலமைச்சர், தோழமைக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் உடனடியாக பொறுப்பிலிருந்து விலகி விட்டு தன்னை சந்திக்க வேண்டும் என்றும், திமுக தலைவர் என்கிற முறையில் தான் கூனிக்குறுகி நிற்பதாகவும், தோழமைக் கட்சித் தலைவர்களிடத்தில் தனது மிக வருத்தத்தை தெரிவிப்பதாகவும் அறிக்கையின் மூலம் தெரிவித்து இருப்பது அவரது பெருந்தன்மையை காட்டுவதுடன் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை காப்பாற்றப்பட வேண்டும் என்பதும், அரசியல் அணி தொடர்ந்து நீடித்து நிலைபெற்று இருக்க வேண்டும் என்பதிலும் அவர் காட்டியுள்ள உறுதிப்பாடு வரவேற்கத்தக்கது; பாராட்டத்தக்கது.

குறைபாடுகளை சரி செய்திட திமுக தலைமை உரிய முயற்சிகளை உடனடியாக மேற்கொண்டுள்ளது.

நமது கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் குறித்து நம்மிடம் கேட்டார்கள், நாமும் உடனடியாக பட்டியல் அளித்துள்ளோம். நல்ல தீர்வுகள் எட்டப்படும் என்று கருதுகின்றோம்.

நடந்து முடிந்துள்ள தேர்தல் குறித்து நாம் மனப்பூர்வமாகவும், உள்ளது உள்ளபடியும் நமது அமைப்புகளில் விவாதித்து உரிய தீர்வை காண வேண்டும்.

வெற்றி, தோல்விகள் சகஜமானது தான் என்றாலும், தோல்விகள் ஏன், எவ்வாறு, எப்படி நிகழ்கிறது என்பது குறித்து ஆய்ந்தறிந்து படிப்பினைகளைப் பெற்று நம்மிடம் குறை இருப்பின் சுய விமர்சனமாக ஏற்க வேண்டும்.

அனுபவம் என்பது திரும்பத்திரும்ப நிகழாமல் இருக்க என்ன செய்திட வேண்டுமோ அதனை செய்திட வேண்டும்.

நமது பலம் – பலவீனம் குறித்து மிகைப்படுத்தல் கூடாது. நமக்கு பலமும் உண்டு; பலவீனமும் உண்டு. நம்மைப் பற்றி மதிப்பீடு செய்யும்போது நமது பிம்பத்தை மிகைப்படுத்தலும் கூடாது. நமது பலத்தை மிகவும் குறைத்தும் மதிப்பீடு செய்ய வேண்டியது இல்லை.

எதார்த்தம் மிக முக்கியம் என்பதனை நாம் நன்கு உணர்ந்து தொலைநோக்குப் பார்வையுடன் நாம் செயல்படுவது மிக முக்கியம் என்றே கருதுகின்றோம்.

இவைகள் குறித்தெல்லாம் பரிசீலித்து தீர்வு காண வேண்டும். அதே நேரத்தில் இதனில் மூழ்கி நிற்காமல் நமக்குரிய அடுத்தகட்ட அரசியல் அமைப்புநிலை கடமைகள் குறித்தும் அவைகளை நிறைவேற்றுவது குறித்தும் நாம் உடனடியாக கவனம் செலுத்திட வேண்டும்.

குறிப்பாக 2022 ஆம் ஆண்டிற்கான கட்சி உறுப்பினர் புதுப்பித்தல், புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் கொரோனா மற்றும் தேர்தல் பணிகள் காரணமாக தொய்வு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு பணிகளுக்கு மத்தியிலும் திருவாரூர் மாவட்டக் குழு, உறுப்பினர் புதுப்பித்தல், சேர்த்தல் பணிகளை முழுமையாக முடித்து பட்டியல், உரிய தொகையினை கட்சி முடிவு செய்தவாறு, சனவரி 29ஆம் தேதியே மாநில மையத்திற்கு அனுப்பி வைத்தது நல்லதொரு முன்னுதாரணமாகும்.

பல மாவட்டங்கள் குறிப்பிட்ட அளவிற்கு பணம் அனுப்பி வைத்துள்ளார்கள்.

**இனியும் காலதாமதம் செய்யாமல் மிகுந்த முக்கியத் துவம் வாய்ந்த உறுப்பினர்கள் புதுப்பித்தல், புதிய உறுப்பினர்களை சேர்த்தல் பணிகளை உடனடியாக முடித்திடும் பணிகளை கிளை, இடைக்குழுக்கள் முடித்து மாவட்டக் குழுவிடம் வழங்கிட வேண்டும். அவைகளை சரிபார்த்து மாவட்ட குழுவில் பரிசீலனை செய்து மாநில மையத்திற்கு மாவட்ட குழுக்கள் காலத்தில் அனுப்பி வைத்து, அமைப்புநிலை கடமையை நிறைவேற்றிட வேண்டும்.**

கிளை, இடைநிலை மாநாட்டு பணிகளில் கவனம் செலுத்தி முடிப்பதுடன், மாநில கட்சியின் வழிகாட்டுதல்படி மாநாடுகளை நடத்திட வேண்டும்.

மாவட்ட மாநாடுகளை நடத்தி அதனை தொடர்ந்து மாநில மாநாட்டிற்கு நாம் ஆயத்தமாக வேண்டும்.

கோபிச்செட்டிபாளையத்தில் தியாகசீலர் சி.எஸ்.சிவசுப்பிரமணியம் அரங்க கட்டிடப் பணிகள் தொய்வின்றி நடைபெற்றுவருகின்றது. முழுமைபெற தோழர்களின் முழுமையான ஒத்துழைப்பு தேவை என்பதனை அனைவரும் நன்கறிவோம் – அறிவதோடு மட்டுமின்றி ஒத்துழைப்பை உதவியை வழங்க முன்வரவேண்டும்.

அமைப்புநிலை கடமைகளுடன் அரசியல் பயணத்தை தொய்வின்றி தொடர்ந்திட வேண்டும். நமது அரசியல் நிலைப்பாட்டை உறுதியுடன் மேற்கொள்ள ஆயத்தமாக வேண்டும்! அதற்குரிய பணிகளையும் மேற்கொள்வோமாக! மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க

இரா.முத்தரசன்

# சால்வை தவிர்த்து நிதியாக...

அன்பான வேண்டுகோள்

பேரன்புமிக்க தோழர்களே வணக்கம்!

மாநில கட்சி நிர்வாகிகள் மாவட்டங்களில் நடைபெறும் கட்சி நிகழ்ச்சிகள் மற்றும் திருமணங்களில் கலந்துகொள்ள வருகை தருகின்றனர்.

அவ்வாறு வரும்போது நமது கட்சித் தோழர்கள் கட்சியின் பால் கொண்ட பற்றால் கட்சியை பெருமைப்படுத்த வேண்டும் என்ற உணர்வால் வருகை தரும் தோழர்களுக்கு சால்வை அணிவித்து தங்களின் கட்சி உணர்வை, மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருவது வரவேற்கத்தக்கது.

ஆனால் சால்வை அணிவிப்பதால், அதிலும் குறிப்பாக எவருக்கும் பயனளிக்காத ஜிலு, ஜிலு சால்வை அணிவிப்பதால் யாருக்கு என்ன பயன்?

நாம் ஆக்கபூர்வமாக யோசித்தால் நல்லது. ரூபாய் இருநூறு, முன்னூறு அதற்கு மேலும் செலவு செய்து சால்வை வாங்கி அணிவிப்பதை கைவிட்டு, சால்வைக்காக செலவிடும் தொகையை கட்சிக்கு நிதியாக கொடுத்தால் நல்லது தானே!



06.03.2022 அன்று தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில், நமது மதிப்புமிக்க தலைவர் தோழர் எஸ்.அழகர்சாமி அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். அந்நிகழ்ச்சியில் பல தோழர்கள் தாங்களாக முன்வந்து தியாக சீலர் சி.எஸ்.சுப்பிரமணியம் அரங்க கட்டிட நிதி வழங்கினார்கள். அவ்வாறு அவர்கள் அளித்திட்ட தொகை ரூ.5600.00 ஆகும்.

ரூ. 100, 200 என்று மிகுந்த மகிழ்ச்சியோடு வழங்கினார்கள். விருதுநகர் மாவட்ட தேர்தல் பிரச்சாரத்தில் ஒரு தோழர் ரூ.500 வழங்கினார். இவ்வாறு நிதி வழங்கிய தோழர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள்.

இத்தகைய முன்னுதாரணத்தை அனைத்து தோழர்களும் பின்பற்ற வேண்டுமாய் மாநில கட்சி அன்புடன் வேண்டுகிறது. தயவுகூர்ந்து சால்வை அணிவிப்பதைத் தவிர்த்து நிதியாக வழங்கி தங்களின் அன்பை, மகிழ்ச்சியை வெளிப்படுத்துமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அன்பான வேண்டுகோளுக்கு தோழர்கள் அனைவரும் மதிப்பளிப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.


இவண்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

தமிழ்நாடு மாநிலக் குழு



- டாக்டர்
ஜி.ஆர்.இரவீந்திரநாத்




# 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை ஒன்றிய - மாநில அரசுகள் பாதுகாத்திடுக!

**அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில், அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு அரசியல் சட்ட ரீதியாக செல்லுபடியாகுமா? என்ற கேள்வியை சென்னை உயர் நீதிமன்றம் எழுப்பியுள்ளது.**

இவ்வழக்கில் ஒன்றிய அரசும் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை எதிர்த்து வாதிடுகிறது. இது வருத்தமளிக்கிறது.

ஒன்றிய அரசின் நிலைபாடு சமூக நீதிக்கும், ஏழை எளிய மாணவர்களின் நலன்களுக்கும், கிராமப்புற மற்றும் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களின் நலன்களுக்கும் எதிரானது.

அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 % இட ஒதுக்கீடு சட்டத்திற்கு எதிரானதல்ல. தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இளநிலை மருத்துவ இடங்களில்,அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இடஒதுக்கீடு வழங்குவது பற்றி ஆராய ஓய்வு பெற்ற நீதியரசர் கலையரசன் தலைமையில் ஒரு குழுவை கடந்த அ.இ.தி.மு.க அரசு அமைத்தது.

அக்குழு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க பரிந்துரைத்தது.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டின் அவ சியத்தை, நியாயத்தை நீதியரசர் கலையரசன் குழு பல்வேறு தரவுகளின் அடிப்படையில் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து உறுதிபடுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் அ.இ.அ.தி.மு.க அரசு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இளநிலை மருத்துவம் பல்மருத்துவம் உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளில் 7.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்து சட்டம் இயற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பியது.

ஆளுநர் சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளை பெறுவ தாகக் கூறி, ஒப்புதல் வழங்க காலதாமதம் செய்தார். அத னால் அ.இ.அ.தி.மு.க அரசு இந்த ஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்துவதற்கான அரசாணையை வெளியிட்டது.

பின்னர் ஆளுநரும் இச்சட்டத்திற்கு அனுமதி வழங்கினார். அதன் பின்னரே இந்த ஒதுக்கீடு சட்டமாக்கப்பட்டது. முறை யான சட்ட ஆலோசனை பெற்ற பின்னரே ஆளுநர் இந்த அனு மதியை வழங்கியுள்ளார்.

எனவே, இந்த இட ஒதுக்கீடு சட்டத்திற்கு புறம்பானது என்ற வாதம் சரியல்ல. கல்வி நிறுவன அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவது புதிதல்ல ஒன்றிய அரசின் மருத்துவக் கல்வி நிறுவனங்களான எய்ம்ஸ், ஜிப்மர் போன்றவற்றில் இளநிலை மருத்துவம் (MBBS) பயின்றவர்களுக்கு முதுநிலை மருத்துவக் கல்வியில்(MD/MS) தனி இட ஒதுக்கீடு உள்ளது. அதாவது, ‘அந்த நிறுவனத்தில் படித்தவர்களுக்கு’ என்று தனி இட ஒதுக்கீடு (Institutional Quota) நடைமுறைப்படுத்தப்பட்டது. இது நீண்டகாலமாக உள்ளது. ஜிப்மர் நிறுவனத்தில் இந்த கல்வி ஆண்டிலும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கல்வி நிறுவன அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கப்படுவது ஒன்றும் புதிதல்ல.

தற்பொழுது ஒடிசா மாநில அரசும் அரசுப்பள்ளி மாணவர் களுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் கல்வியில் இட ஒதுக்கீட்டை ,அதுவும் 15 விழுக்காடு வரை வழங்குகிறது.

எனவே, சட்டரீதியான எதிர்பார்ப்பு கோட்பாடு என்ற அடிப் படையில் இந்த இட ஒதுக்கீடு வழங்கலாம் எனவும் சில வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள்.

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ இடங் களுக்கு நீட் தேர்வை ஒன்றிய அரசு திணித்தது. இந்த திணிப்பு மாநில அரசின் உரிமைகளுக்கும், சமூக நீதிக்கும் எதிரானது என தமிழக அரசின் தரப்பில், மக்களின் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டது. அப்போது ஒன்றிய அரசின் அமைச்சர்கள் இது மாநில உரிமைகளையும், சமூக நீதியையும் பாதிக்காது. ஒன்றிய அரசு நீட் தேர்வை நடத்தி, மதிப்பெண் மற்றும் தர வரிசை பட்டியலை மட்டுமே மாநிலங்களுக்கு வழங்கும். மாநில அரசுகள், அந்த அந்த மாநிலங்களில் நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டை பின்பற்றி மாணவர் சேர்க்கைகளை நடத்திக் கொள்ளலாம்.

எனவே, மாநில உரிமையோ ,இட ஒதுக்கீடோ பாதிக்கப்படாது என உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

அந்த உறுதி மொழிகளை மீறி, அரசுப்பள்ளி மாணவர் களுக்கான தனி இடதுக்கீடு மருத்துவக் கல்வி தரத்தை பாதிக்கும், தகுதி அடிப்படையிலான மாணவர் சேர்க்கையை பாதிக்கும், நீட் தேர்வின் நோக்கத்தை நீர்த்துப் போகச் செய்து விடும் என தற்பொழுது ஒன்றிய அரசு வாதிடுவது வருத்தத்தை அளிக்கிறது.

அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுகீட்டில், நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களே சேர்க்கப்படுகிறார்கள். நீட் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் இந்த இட ஒதுக் கீட்டின் மூலம் சேர இயலாது. அது மட்டுமல்ல, இந்த இடங் களை நிரப்புவதற்காக மாநில அரசு நீட் தேர்வின் கட் ஆஃப் மதிப்பெண்ணை குறைப்பதுமில்லை. நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மதிப்பெண் மற்றும் தரவரிசை பட்டியல் அடிப்படை யிலேயே மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள்.

எனவே, மருத்துவப் படிப்பின் தரம் பாதிக்கப்படும், தகுதி அடிப்படையிலான மாணவர் சேர்க்கை பாதிக்கப்படும் என்ற வாதத்திற்கே இடமில்லை.

ஒன்றிய அரசு தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர் நிலை மருத்துவப் பல்கலைக் கழகங்களின் மருத்துவ மற்றும் பல் மருத்துவ இடங்கள் காலியாகப் போய்விடக்கூடாது என்பதற்காக, மாணவர் சேர்க்கையின் இறுதி நிலையில் நீட் தேர்வின் கட் ஆஃப் மதிப்பெண்ணை குறைத்துவிடுகிறது. அதே போல், கடைசி நேரத்தில் தனியார் கல்வி நிறுவனங்களே நேரடியாக மாணவர் சேர்க்கையை மாப் அப் ( Mop up ) கவுன் சிலிங் மூலம் நடத்திக் கொள்ள அனுமதிக்கிறது. இதன் காரணமாக

**<u>நீட் தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்று இருந்தாலும், அதிக வசதி படைத்த மாணவர்கள் மருத்துவ இடங்களை பெற்று விடுகின்றனர். அதே சமயம் அவர்களை விட நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற, தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மிக அதிகமான கட்டணத்தை செலுத்த முடியாத, பணவசதி இல்லாத மாணவர்கள் மருத்துவ இடங்களை பெற இயலாமல் தவிக்கிறார்கள்.</u>**

இது தரம், தகுதி அடிப்படையிலான மாணவர் சேர்க்கைக்கு எதிராக உள்ளது. பணம் என்பதே மருத்துவ இடத்தை பெறு வதற்கான தகுதியாக மாறிவிடுகிறது. தர அடிப்படையிலான மாணவர் சேர்க்கைக்கு எதிராக செயல்படும் ஒன்றிய அரசு, அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டால் தரம் போய்விடும் என்பது நகைப்பிற்குரியது.

தனியார் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிகர் நிலை மருத்துவப் பல்கலைக் கழகங்களின் இடங்களுக்கான மாணவர் சேர்க்கையை கடைசி வரை ஒன்றிய மற்றும் மாநில அரசுகளே நடத்திட வேண்டும் என்பதில் ஒன்றிய அரசு உறுதிகாட்ட வேண்டும். தனியார் மருத்துவக் கல்வி நிறுவ னங்கள் கடைசிவரை நேரடியாக மாணவர் சேர்க்கையை நடத் திட அனுமதிக்கக்கூடாது.

தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களின் நலன்களுக் காக நீட் கட் ஆஃப் பர்செண்டைலை (NEET CUT OFF PERCEN-TILE) கடைசி நேரத்தில் குறைத்திடக் கூடாது .

அரசுப்பள்ளி மாணவர்களுக்கான 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டால் அதிக அளவில் அரசுப்பள்ளி மாணவர்கள், கிராமப் புற மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேருகிறார்கள். இதற்கு நீட் தேர்வுதான் காரணம் என உண்மைக்கு மாறான கருத்தை பா.ஜ.க தலைவர்கள் கூறிவருகிறார்கள்.இது தவறான வாதம்.இது கண்டனத்திற் குரியது.

உண்மையில் நீட் நடைமுறைக்கு வந்த பிறகு , அரசு பள்ளி மாணவர்கள் இட ஒதுக்கீடு வழங்கும் முன்பு, அரசுப் பள்ளி மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேரு வது 1 விழுக்காட்டிலிருந்து 0.1 விழுக்காடாக வீழ்ச்சி அடைந்து விட்டது.

அரசு மருத்துவர்கள் தொடர்ந்து மழை, வெள்ளம், புயல், கொரானா, டெங்கு, பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், பேரிடர் காலங்களில் தொடர்ச்சியான பணியினால் தேர்வு தயாரிப்பில் கவனம் செலுத்த முடியாத நிலை உள்ளது. அதே போன்று, அரசு மருத்துவர்கள் கிராமப்புறங்களில் வேலை செய்வதை ஊக்கப்படுத்தவும், கிராமப்புற மக்களுக்கு முதுநிலை மருத்துவப் படிப்பு படித்த அரசு மருத்துவர்களின் சேவை கிடைப்பதை உறுதிப் படுத்தவும் , முதுநிலை மருத்துவப் படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு (Service quota) வழங்கிட உச்சநீதிமன்றமே அனுமதி வழங்கியுள்ளது.

அது மட்டுமல்லாமல் கடினமானப் பகுதிகளில், மலைப் பகுதிகளில் வேலை செய்யும் அரசு மருத்துவர்களுக்கு முதுநிலை மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு நீட் மதிப்பெண்ணுடன் சேர்ந்து கூடுதலாக ஊக்க மதிப்பெண்களை வழங்கவும், MCI PG Medical Education Act 2017 amendment மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு மருத்துவமனைகளில் உள்ள டி.என்.பி மருத்துவ இடங்களில் அரசு மருத்துவர்களுக்கு (PG DIPLOMA, DNB GOVERNMENT HOSPITAL SEATS) 100 சதவீத இட ஒதுக்கீடும், டிப்ளோமா இடங்களில் 50 சதவீத இட ஒதுக்கீடும் வழங்கப் படுகிறது.

அதே போன்று அரசுப்பள்ளி மாணவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டும். ஏனெனில், நீட் தேர்வை எதிர் கொள்வதில் அரசு மருத்துவர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளை அரசுப் பள்ளி மாணவர்களும் எதிர் கொள்ளுகிறார்கள்.

அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கல்வி ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ளதாக நீதியரசர் கலையரசன் குழு அறிக்கை கூறுகிறது. அதற்கு அவர்களின் வாழ்நிலையும், குடும்பப் பொருளாதார மற்றும் கல்வி நிலையும் காரணம் என அவ்வறிக்கை கூறுகிறது. அரசு நடத்தும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்,பொருளாதார காரணங்களால் அறிதல் திறனில் பின்தங்குதல், பெற்றோரின் வேலை / கல்வித் தகுதி , பெற்றோரின் வருமானம், வாழ்க்கைத் தரம், பொருளாதார நிலை உருவாக்கும் உளவியல் தடை, அக்குழந்தைகளின் உளவியல் போன்ற பல்வேறு காரணிகளால் அவர்கள் தனி வர்க்கத்தை சேர்ந்தவர்களாக உள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளது.

அவர்களின் கல்வி பெறும் திறனை பாதிக்கும் சூழ்நிலைகள், அப்பள்ளிகளுக்கு வெளியே உள்ளது எனவும் நீதியரசர் கலை யரசன் குழு கூறியுள்ளது.

எனவே, கல்வி ஒரே மாதிரியாக இருந்தாலும் அக்கல்வியை பெறுவதில் உள்ள சூழல் தனியார் பள்ளி மாணவர்களுக்கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் ஒரே மாதிரியாக, சமவாய்ப்பு டையதாக இல்லை. ஏற்றத்தாழ்வாக உள்ளது.

மேலும் அரசுப் பள்ளிகளில் 85 விழுக்காடு பள்ளிகள் கிராமப்புறங்களில் தான் உள்ளன.

முன்னேறிய வகுப்பு மாணவர்களில் 1% மட்டுமே அரசுப் பள்ளிகளில் படிக்கிறார்கள். எனவே, சாதி ரீதியாக மிகவும் அடித்தட்டில் உள்ளவர்கள் அரசுப் பள்ளிகளில்தான் படிக்கி றார்கள்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு என்ற அடிப்படையில் இந்த இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட போதிலும், இதன் மூலம் பயன் பெறும் மாணவர்கள் சமூக ரீதியிலும், கல்வி ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் மிக, மிக பின் தங்கியவர்கள் ஆவர். எனவே, இந்த இட ஒதுக்கீட்டை பாது காத்திட வேண்டும்.

மருத்துவக் கல்வியில் அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை காப்பாற்றத் தவறினால் இதர தொழிற் படிப்புகளில் உள்ள 7.5 % இட ஒதுக்கீட்டையும் இழக்கும் நிலை ஏற்படும்.

நீட் விலக்கு பெற்றாலும் அரசு பள்ளி மாணவர்கள் இட ஒதுக்கீடு தொடர்ந்து வழங்கப் பட வேண்டும். அதன் மூலம் மட்டுமே அரசு பள்ளி மாணவர்கள் அதிக அளவில் மருத்துவ கல்லூரிகளில் , தொழிற் கல்லூரிகளில்சேர முடியும்.

எனவே, இந்த இட ஒதுக்கீட்டை பாதுகாத்திடும் வகையில், நீதியரசர் கலையரசன் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீதிமன்றத்தில் வலுவான வாதங்களை முன்வைத்து வாதிட வேண்டும்.

இந்த இட ஒதுக்கீட்டை பாதுகாக்க அனைத்து நடவடிக்கை களையும் எடுக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தொடர்புக்கு: **9940664343**

## ஒடிசா உள்ளாட்சி தேர்தல்




ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் முடிவு அறிவிக்கப்பட்ட இடங்களில், கிராம பஞ்சாயத்தில் சிபிஐ - 32லும், தாலுகா சமிதியில் சிபிஐ - 8 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 49

# ஆணவப் படுகொலையைத் தடுக்க சட்டம் இயற்றுக!

சேலம், ஓமலூரைச் சேர்ந்த 21 வயதான பொறியியல் பட்டதாரி கோகுல்ராஜ், திருச்செங்கோடு மலையில், 2015 ஜூன் 23 ஆம் தேதி தன்னுடன் படித்த நாமக்கல்லை சேர்ந்த மாணவியுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது கடத்தப்பட்டார்.

மறுநாள் தொட்டிபாளையம் ரயில்வே தண்டவாளத்தில் தலை துண்டிக்கப்பட்டு, நாக்கு அறுக்கப்பட்ட நிலையில் சடலமாகக் கிடந்தார். தான் தற்கொலை செய்து கொள்வதாக வீடியோ பதிவும் செய்து, கடிதமும் இருந்ததால் முதலில் தற்கொலை என்றே கருதப்பட்டது. கோகுல்ராஜிடம் பேசிக் கொண்டிருந்த பெண் சொல்லித்தான் அவர் கடத்தப்பட்ட விபரமே தெரிந்தது. தற்கொலையல்ல எனத் தெளிவானது. விசாரணையில், கோகுல்ராஜை கடத்தியது தீரன் சின்னமலைக் கவுண்டர் பேரவை நிறுவனர் யுவராஜ் எனத் தெரிந்து, 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கைத் திறம்பட விசாரித்து, கைது நடவடிக்கைகளுக்கு காரணமாக இருந்த திருச்செங்கோடு டி.எஸ்.பி. விஷ்ணுபிரியா 2015 செப்டம்பர் 18ல் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

“சாதி ஆதிக்க சக்திகளின் அழுத்தமும், உயர்போலீஸ் அதிகாரி ஒருவரின் தொல்லையும்தான் விஷ்ணுபிரியாவின் தற்கொலைக்கு காரணம். தற்கொலைக்கு முன்பு எழுதிய கடிதத்தில் 8ம் பக்கத்தில் தற்கொலை விவகாரம் தொடர்பான தகவல் டேப்பில் இருப்பதாகத் தெரிவித்து உள்ளார். அந்த விவரங்களைப் போலீசார் அழித்து விட்டனர். இதுதொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்“ என்று காவல்துறையினர் சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவரது தந்தை புகார் கொடுத்தார். ஆனால் காவல்துறை விசாரணையில் “அது தற்கொலையைத் தவிர வேறொன்றும் இல்லை” என்று அறிக்கை தரப்பட்டது.

“என்னிடம் விசாரித்திருந்தால், விஷ்ணுபிரியா தற்கொலை தொடர்பாகப் பல ஆதாரங்களைக் கொடுத்திருப்பேன்” என குற்றம் சாட்டப்பட்ட யுவராஜ் ஆடியோ வெளியிட்டார்!

போலீஸ் டிஎஸ்பியையே தற்கொலை செய்து கொள்ள வைக்கும் அளவுக்கு அச்சுறுத்தல்கள் அதிகமாக இருந்ததால், மதுரைக்கு வழக்கை மாற்ற உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இரண்டு வருடங்களாக மதுரை வன்கொடுமை தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் 108 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. 500க்கும் மேற்பட்ட ஆவணங்கள், சிசிடிவி உட்பட 100க்கும் மேற்பட்ட தடயங்கள் சமர்பிக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த மார்ச் 5ஆம் தேதி கொலை செய்தது உண்மைதான் என வழக்கு முடிக்கப்பட்டது.

மார்ச் 8ம் தேதி நீதிபதி சம்பத்குமார் முதல் குற்றவாளியான யுவராஜ் இரண்டாவது குற்றவாளியான ஓட்டுநர் அருண் ஆகியோருக்கு

கொலை செய்தல், பட்டியலின, பழங்குடி மக்கள் மீதான வன்கொடுமை சட்டத்தின்படி ஒரு ஆயுள் தண்டனை,

குற்றச் சதி செய்து பட்டியல் இனத்தவரைக் கொலை செய்ததற்காக இன்னொரு ஆயுள் தண்டனை, ஆட்கடத்தி கொலை செய்ததால் மற்றொரு ஆயுள் தண்டனை என தலா 3 ஆயுள் தண்டனைகளை விதித்து உத்தரவிட்டார். சாகும்வரை சிறையில் இருக்க வேண்டும்.

மற்ற எட்டு பேருக்கு ஒரு ஆயுள் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

சாதித் தலைவராகி அதிகாரங்களைப் பெறுவதற்கு, தனக்கு சம்பந்தமே இல்லாத ஒரு பட்டியல் இனத்தவரை கொலை செய்ய முடியும், சாதிச் செல்வாக்கைப் பயன்படுத்தி அரசு உயர் அதிகாரிகளை வளைக்க முடியும், தற்கொலைக்கும் தள்ள முடியும் என்ற இறுமாப்போடு வலம்வந்த சாதி ஆதிக்கத் திமிரை, இந்தத் தீர்ப்பு பிடரியில் அறைந்திருக்கிறது.

அரசு தரப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட ப.பா. மோகன், அச்சுறுத்தல்களைப் புறம்தள்ளி, கட்டணம் கூட வழங்காத நிலையிலும் திறம்பட வழக்கை நடத்தி இந்த இமாலய வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளார். வழக்கை விளக்கி ஊடகங்களிடம் பேசிய போது “நான் கம்யூனிஸ்ட் வழக்கறிஞர்” என விளித்துக் கொண்டதைக்கேட்டு உள்ளம் பெருமிதத்தால் துள்ளியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ் மிக்க தலைவர்களில் ஒருவரான தோழர் பவானி பாலு அவர்களின் புதல்வர் மூத்த வழக்கறிஞரான தோழர் ப.பா. மோகன். அவர்களது குடும்பமே தலைமுறைகளாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியுடன் இணைந்து இயங்குகிறது.

“ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்காகவும், அதனால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும் , அந்தக் குற்றத்தில் ஈடுபடுகிறவர்களைத் தண்டிப்பதற்காகவும் சிறப்பு சட்டம் ஒன்றைப் பாராளுமன்றம் இயற்றவேண்டும்” என 2018ல் வழங்கிய தீர்ப்பில் உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. விரைவில் சட்டம் இயற்ற ஒன்றிய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்ப்பின் பின்னணியில் டிஎஸ்பி விஷ்ணுபிரியா தற்கொலை குறித்து தமிழ்நாடு அரசு மறுவிசாரணை செய்ய வேண்டும்.




தோழர் அழகர்சாமியின் 13 ஆவது ஆண்டு நினைவு தினம்!

# சோ.அழகர்சாமி கடைபிடித்த கொள்கைகளை நிறைவேற்றுவோம்!

## எட்டையபுரத்தில் இரா.முத்தரசன் முழக்கம்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர், கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் 5 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட தோழர் எஸ். அழகர்சாமி அவர்களின் 13வது நினைவுதின விழா மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னதாக அழகர்சாமியின் இல்லத்திற்குச் சென்று இரா.முத்தரசன், பி. எஸ். மாசிலாமணி ஆகியோர் அழகர்சாமியின் மனைவி தாயம்மாள் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர். எட்டையபுரம் முத்துசாமி தீட்சதர் மண்டப அரங்கில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் எட்டயபுரம் தாலுகா குழு 13 ஆம் ஆண்டு நினைவு விழா சிறப்பாக நடைபெற்றது. விவசாயிகள் சங்கத்தின் தாலுகா தலைவர் ரவீந்திரன் தலைமை ஏற்றார். எஸ். நல்லையா ஆர். ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்த எஸ். ராமசுப்பு வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்ச்சிகளை வ. பாலமுருகன் தொகுத்து வழங்கினார். ‘கரிசலில் உதித்த செஞ்சூரியன்’ அழகர்சாமியின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதிய எஸ். காசிவிஸ்வநாதன் அவர்களுக்கு பாராட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது. நூலினைப் பற்றியும் தோழர் அழகர்சாமி அவர்களையும் நினைவு கூர்ந்து அரசு பாலிடெக்னிக் முன்னாள் முதல்வர்வி.சுப்புராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ. ராஜேந்திரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் அழகுமுத்துப்பாண்டியன், விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் எஸ். எம். ராமையா, விவசாயிகள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் வெ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினர்.

தொடர்ந்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி நூலாசிரியரை வாழ்த்திப் பாராட்டியும் இந்திய, தமிழக விவசாயிகள் பிரச்சனைகளை விரிவாக விளக்கி உரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் சிறப்புரையாற்றினார். அவரது உரையில்..

“ சிறப்பான நூலை எழுதிய காசி விஸ்வநாதன் இங்கு சுருக்கமாக பேசியிருக்கிறார். தலைவர் அழகர்சாமி அவர்களைப் பற்றி சிறந்த நூலை எழுதியிருக்கின்றார். பேராசிரியர் சிவசுப்ரமணியம் மிகச்சிறந்த முன்னுரையை வழங்கி இருக்கின்றார். முன்னுரையே நூலை படிக்கக்கூடிய ஆர்வத்தை தூண்டுகிறது. 83 வயது வரை வாழ்ந்த அவர் இப்போது இல்லை. கடந்த 13 ஆண்டுகளாக அவரைப் பற்றித் தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். முன்னுதாரணமாக வாழ்ந்தவர்.

அழகர்சாமியின் பிறந்தநாள் அவருடைய கிராமமான ராமனூத்திலும், நினைவு நாள் எட்டயபுரத்திலும் கொண்டாடப்படுவது வரவேற்புக்குரியது.

காசி நல்ல காரியமாக அழகர்சாமி என்ற வைரத்தை தோண்டி எடுத்து, வரலாற்றை சிறந்த நூலாக எழுதி ஆவணப்படுத்தி உள்ளார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஏராளமாக தியாகிகளாக வாழ்ந்துள்ளனர். அவர்களெல்லாம் வைரங்கள், வைடூரியங்கள் பூமியில் புதைந்து உள்ளனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனக்கென வாழாத பல்லாயிரம் தியாகிகளை கொண்ட கட்சி.

தோழர் அழகர்சாமி உற்சாகமாக சத்தமாக யாரையும் அன்போடு அழைக்க கூடியவர். ஒரு முறை ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் ஜனசக்தி சந்தா சேர்ப்பு இயக்கத்தை நடத்தினோம். அந்த பணத்தையும் எடுத்துக்கொண்டு பாலன் இல்லம் சென்றபோது அழகர்சாமி உற்சாகத்தோடு வரவேற்றார். ஜனசக்தி சந்தா 4000 முகவரியோடு சேர்த்திருக்கிறோம் என்பதை அறிந்து அதற்கான பணத்தையும் நாம் கொண்டுவந்து இருக்கின்றோம் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார் நாம் பட்ட கஷ்டங்களைப் பற்றி அங்குள்ள தோழர்களிடம் எடுத்துரைத்தார்.

இது போன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற வேண்டும் என்று விரும்பினார். ஜனசக்தியின் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். பி.சீனிவாசராவ் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்தார். பிஎஸ்ஆர் நினைவு தினத்தின்போது திருத்துறைப்பூண்டி வந்தார். நகரம் முழுவதும் கொடியேற்ற ஜி. பழனிச்சாமியின் மோட்டார் பைக்கில் மக்களை நேரடியாக சந்திக்க சென்றார். விஷயங்களை கேட்டறிந்து தீர்வு காண்பதற்காக முயற்சித்தார். ஏழை எளிய மக்கள் மீது மிகுந்த நம்பிக்கையும் பாசமும் கொண்டிருப்பார். மக்களிடம் செல்.. மக்களிடம் கற்றுக்கொள்ள மக்களுக்காக சேவை செய்.. என்று லெனினும் மாவோவும் சொன்னதை அழகர்சாமி செய்தார். எனவேதான் அவர் சட்டமன்ற உறுப்பினராக ஐந்து முறை தேர்வு செய்யப்பட்டார். கூட்டுறவு சங்கங்களின் தலைவராக, ஊராட்சி மன்றத் தலைவராக, மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் உறுப்பினராக திரும்பத் திரும்ப ஒருவர் பல முறை தேர்ந்தெடுக்கப் பட்டார் என்றால் அவர் நம் தலைவர் அழகர்சாமிதான்.

1967 சட்டமன்ற தேர்தல் மிக முக்கியமான தேர்தல். அண்ணா தலைமையிலான கூட்டணியில் சுதந்திராக்கட்சி இடம் பெற்றதால் நாம் அதிலே இடம் பெற விரும்பவில்லை. ஆனால் நெல்லை மாவட்ட அளவில் கூட்டணி அமைத்து பேசினோம். இந்த மாவட்டத்தில் கோவில்பட்டி தொகுதியில் திமுக நம்மை ஆதரிப்பது எனவும்,மாவட்டத்தின் பிற இடங்களில் திமுகவை ஆதரிப்பது என முடிவு செய்தோம். இங்கு அழகர்சாமி வெற்றி பெற்றதைப் போலவே கோட்டூரில் ஏ.கே.சுப்பையா வெற்றி பெற்றார். இரண்டு பேரும் சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் 5 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஒரே தலைவர் தோழர் அழகர்சாமி தான். அவர் எளிமையானவர். எவரையும் சந்திக்க கூடிய ஆற்றல் பொருந்தியவர்.

கூட்டுறவு கடனுக்காக வண்டி மாடுகள் ஜப்தி செய்யப்பட்ட போது கடும் போராட்டத்தை நடத்தி அதில் வெற்றி பெற்றார். மாடுகளை ஜப்தி செய்த இடத்திலேயே கொண்டு வந்து கட்ட வைத்தவர் அழகர்சாமி.

தனக்காக என்று வாழாதவர். தன்னுடைய பிள்ளைகளுக்காக கூட தன் செல்வாக்கை பயன்படுத்திட விரும்பாதவர். அவருடைய மூத்த புதல்வர் ராமமூர்த்தி மருத்துவக் கல்லூரியில் இடம் பெற வேண்டும் என்று கேட்டபோது உன்னுடைய தகுதிக்கு உரியதுதான் நீ பெறமுடியும். யாரிடமும் சிபாரிசு செய்யமாட்டேன் என்று உறுதியாகச் சொன்னவர்.

இன்றுராமமூர்த்தியின்புதல்வரும்,மகள்ஜெயபாரதியின் புதல்வியும் மருத்துவர்கள். இளைய மகன் ரவீந்திரன், மகள் கீதாராணி அவருடைய குழந்தைகள்..வாரிசுகள் நல்ல கல்வி அறிவு பெற்று சமூகத்தில் அழகர்சாமியின் பெயரை உயர்த்திப் பிடிக்கிறார்கள். பலரும் போற்றக்கூடிய நம்முடைய இயக்கத்தினுடைய தலைவர்கள் ஊருக்காக உழைக்க கூடியவர்கள்.

“உனது வாழ்க்கை பிறருக்காக அமைத்துக் கொள். மகிழ்ச்சியாக இருப்பாய்” என்று மார்க்ஸ் சொன்னது பொது வாழ்க்கையில் நேர்மையாக இருப்பவர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தியாகம் செய்ய வேண்டும். பொதுவாழ்க்கையில் மக்களுக்கு சேவை செய்யவேண்டும். எளிமையாக வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். இதுதான் நம்முடைய தியாகிகள் அழகர்சாமி உட்பட பலரும் காட்டிய வழி. இப்படி நேர்மையாக வாழ்ந்த தலைவர்கள் ஏராளம் ஏராளம் நம் கட்சிகள் உண்டு.

13 வயதில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தோழர் அழகர்சாமி இன்றைக்கு தேவைப்படுகிறார்.

அர்ப்பணிப்பு உணர்வோடு நாட்டு மக்களுக்காக சேவை செய்த அழகர்சாமியின் அர்ப்பணிப்பும் நாட்டுப் பற்றும் தனக்கென வாழாது வாழ்ந்த வாழ்க்கை முறையும் நமக்குத் தேவை.


தியாகத்திலே பிறந்தோம்.. தியாகத்தில் வளர்ந்தோம்.. மக்களுக்காகவே நேர்மையோடு வாழ்வோம்.. செயல்படுவோம்.. என்று வாழ்ந்த அழகர்சாமியின் வழியில் நம்முடைய பணிகளை தொடர்வோம்.. வாழ்த்துக்கள்

– நமது நிருபர்

தத்துவார்த்தம் 20



எஸ். தோதாத்ரி



# மதம்

## வரலாற்றுப் பொருள்முதல்வாதம் 8

**“மதம் மக்களுக்கு கொடுக்கப்பட்ட அபினி”, “அடக்கப்பட்ட மக்களின் பெருமூச்சு”, “யதார்த்தம் பற்றிய வினோதமான பிரதிபலிப்பு”- இவைதான் மதம் பற்றிய மார்க்சிய நிலைப்பாடு. இந்த மதமானது ஆளும்வர்க்கத்தின் கருவியாக இருந்த காரணத்தினால், இதனைப் பலர் எதிர்த்து வந்துள்ளனர். சித்தர்கள் மதத்தை எதிர்த்தனர். ‘மதமான பேய்’ என்று வள்ளலார் மதத்தைச் சாடுகிறார். பாரதி மதங்களை கண்டிக்கிறார். பாரதிதாசன், சிங்காரவேலர், ஜீவா, பெரியார் ஆகிய எல்லோருமே அதனை எதிர்த்து வந்துள்ளனர். ஆனால் அது காலந்தோறும் புதுப்புது வடிவங்களை பெற்று வருகிறது. இன்று நமது நாட்டில் மதவாத அரசியல் மேலோங்கி இருப்பதை காணமுடிகிறது.**

மதம் என்பது ஆதிகாலத்தில் கிடையாது. உதாரணமாக நமது சங்க காலத்தில் மதம் என்பது கிடையாது. பல வணக்க முறைகள் இருந்தன. நீர், மரம், மலை என்று இயற்கை பொருட்களில் ஆவி இருப்பதாக மக்கள் நம்பினர். அணங்கு, கொற்றவை, காடு, கிழான், வேலன் என்று பல தெய்வங்களை வணங்கினர். இது இனக்குழு சமுதாய காலகட்டம். ஆவி வணக்கம் மட்டுமே இருந்தது. இது கோட்பாடாக உருவாகவில்லை. இந்த காலகட்டத்தில் சமுதாயம் வர்க்கங்களாக பிரியவில்லை.

இவை மதங்களாக மாறவில்லை. மதம் என்று வரும்பொழுது ஒரு தெய்வத்தை மையப்படுத்தி, ஒரு கருத்தமைப்பை உருவாக்கும் செயல் தோன்றுகிறது. இது மார்க்சிய ரீதியாக, வர்க்க சமுதாயம் தோன்றும் பொழுது இடம் பெறுகிறது. தமிழகத்திலேயே பார்த்தால் முடி மன்னர்கள் (சேர, சோழ, பாண்டியர்கள்) காலத்தில் மதங்கள் இடம்பெறுவதைக் காண்கிறோம். சமணம், பௌத்தம், சைவம், வைணவம் என்று பல மதங்கள் இடம்பெறுவதைக் காண்கிறோம். இவை ஒவ்வொன்றும் வர்க்கச் சார்பு உடையவை. உதாரணமாக சமணம் வணிகர்களுக்கு ஆதரவாக இருந்தது. பௌத்தம் வேளாளர்களுக்கு ஆதரவாக இருந்தது. சைவம் வேளாளர்களுக்கு ஆதரவாக இருந்தது. வைணவம் அக்காலத்தில் நிலவுடைமை மத்தியதர வர்க்கத்திற்கு ஆதரவாக இருந்தது. இந்த வர்க்கங்களுக்கு இடையே உள்ள மோதல்கள் காரணமாக இவற்றுக்கிடையே போராட்டங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த முரண்பாடுகள் தெரியாத வண்ணம் இதுபக்தி என்ற மருந்தை அதனதன் தொண்டர்களுக்கு முன்வைத்தது. இது ஆண்டான் அடிமை சமூகத்திற்கு ஏற்றதாக இருந்தது. அதே சமயத்தில் இதற்கு உள்ளாக சமுதாயத்தை எதிர்க்கும் குரல்களும் இருந்தன. நந்தன் கதை, கண்ணப்ப நாயனார் கதை ஆகியனவும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் பல சாதிகளை சேர்ந்தவர்கள்.

ஆயினும் பக்தி என்ற ஒரு குடைக்குள் ஒன்றாக இருந்தனர். இது ஒரு வகையான சாதிய மறுப்பு குரலாகும். இதே மதங்கள் இன்று பூர்சுவா தன்மையுள்ளவையாக மாறிக் கொண்டிருப்பதை காண முடியும். இதே போன்றதுதான் மற்ற மதங்களின் நிலையும். இவையாவும் நடைமுறையை விட்டு விலகி பக்தனை வினோதமான உலகத்திற்கு இட்டுச் செல்கின்றன. இன்றைக்கு நமது நாட்டில் பல புதுப் புது கோயில்கள் தோன்றுகின்றன. இதுவரை இல்லாத பல புது வணக்க முறைகள் தோன்றுகின்றன.

இந்த மதத்தை எதிர்க்க முடியாதா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு விடை எதிர்க்க வேண்டும் என்பது தானா? ஆனால் அது வெறும் கருத்து பிரச்சாரத்தால் மட்டும் முடியாது. அதன் சமுதாய அடித்தளத்தையும், அரசியல் அடித்தளத்தையும் அகற்ற வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது தான் மதத்தின் பிடிப்பு குறையும்; மறையும்.


இதற்கு நடைமுறை உதாரணங்கள் உள்ளன. நமது நாட்டில் சைவ மதத்தையும், பௌத்தத்தையும் ஆதரித்த மன்னர்கள் இருந்தனர். அவர்களது ஆதரவு இவற்றிற்கு இல்லாமல் போன பொழுது இவை வலுக்குன்றி படிப்படியாக சமூக அரங்கில் இருந்து மறைந்தன. மகேந்திரப் பல்லவனும், கூன் பாண்டியனும் சைவ ஆதரவினை விட்ட பொழுது சைவம் பல சோதனைக்குள்ளாகி மறைந்தது. இது பழங்கால உதார ணம். நடைமுறையில் மதத்தின் செல்வாக்கை குறைத்து, சோவியத் நாட்டில் செய்தவற்றை குறிப்பிடுவோம். லெனின் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக கிருத்துவத்தின் செல்வாக்கு அங்கு குறைந்தது. அவையாவன

**1) அரசாங்கத்திலிருந்து மதம் பிரிக்கப்படும். 2) மத அடிப்படையில் சலுகைகள் தடை செய்யப்படும் 3) யாரும் எந்த மதத்தையும் பின்பற்றலாம்; பின்பற்றாமல் இருக்கலாம். அரசாங்க ஆவணங்களில் மதம் பற்றிய குறிப்புகள் இடம் பெறாது. 4) அரசாங்கம் எந்த மத நடவடிக்கைகளிலும் ஈடுபடாது 5) பொதுஜன அமைதியை குலைக்காத வகையில் மதச் சடங்குகள் நடத்தலாம். இது அவரவர்கள் சொந்த விஷயம். இதற்கு அரசு ஆதரவு கிடையாது. அரசு அதிகாரிகள், அலுவலர்கள் யாரும் மத விழாக்களில் அரசு சார்பில் பங்கெடுக்கக் கூடாது.**

லெனினது இந்த நிலைப்பாடு நடைமுறை சார்ந்த ஒன்று. இதற்கு பெரும்பலன் இருந்தது. மடாலயங்களின் சொத்து தேச உடைமையாக்கப்பட்டது. இதன் காரணமாக அதன் அடிப்படையும் மறைந்தது. மதம் வெறும் நம்பிக்கை சார்ந்த ஒன்றாக மட்டுமே விளங்கியது. இது மறைய நாளாகும். இது மேல் கட்டுமானத்தின் தன்மையாகும்.

இந்தியாவிலும் மதச்சார்பற்ற அரசு என்பன சட்டத்தில் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் இல்லை. இது தனியாகப் பார்க்க வேண்டிய ஒன்று. இப்பொழுது கட்சிக்கும் மதத்திற்கும் என்ன தொடர்பு? இதற்கு ஜீவா அவர்கள் விளக்கம் கொடுத்துள்ளார். அதனை அப்படியே தருகிறோம்.

**“மத எதிர்ப்புப் போரை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் லட்சியமாக பயன் படுத்த வேண்டும் என்ற வாதம் பூர்ஷ்வா அராஜகவாதிகளின் வாதம் என்று லெனின் சுட்டிக் காட்டியுள்ளார். அதனால்தான் லெனின் மதத்தைப் பற்றி எழுதியுள்ள நூலில், மத நம்பிக்கையுள்ள தொழிலாளர்களை கட்சியில் கொண்டுவர குறிப்பிட்ட அளவிற்கு கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார். லெனினுடைய கருத்தில் புரோகிதன் கூட கம்யூனிஸ்ட் கட்சியில் சேரலாம். ஆனால் ஒரு நிபந்தனை. அவன் கட்சியின் திட்டத்தை எதிர்க்க கூடாது. மாறாக கட்சியின் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவர உணர்வுபூர்வமாக முழுமனதோடு செயலாற்ற வேண்டும். மதப் பிரச்சாரத்திற்கான ஒரு கருவியாக கட்சியைப் பயன்படுத்தக்கூடாது...”**



“அறிவுப் பிரச்சாரத்தில் மத நம்பிக்கையை வேரோடு சாய்த்து விட முடியும் என்று பகுத்தறிவுவாதிகள் நம்புகிறார்கள். ஒரு மார்க்சியவாதியான நான் பொருள் முதல் வாதியாக இருப்பதால் எல்லாவிதமான மத நம்பிக் கைகளுக்கும் பரம வைரி என்பதில் சந்தேக மில்லை”

*(மதமும் மனித வாழ்வும். ஜீவா பக்கம் 12, 13)*

தொடர்புக்கு: **98947 83657**

### மார்ச் 28,29 வேலை நிறுத்தத்தில்

# விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பங்கேற்பு

தமிழ்நாடுவிவசாயிகள்சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலாமணி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தின் மாநில பொதுச்செயலாளர் பெ. சண்முகம், தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் என்.பெரியசாமி, அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் வி. அமிர்தலிங்கம் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

“மக்களைக் காப்போம்! தேசத்தைக் காப்போம்” என்ற முழக்கத்தை முன்வைத்து மார்ச் 28,29 இரண்டு நாட்கள் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ள அனைத்து தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்துள்ளன. தொழிலாளர்களின் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் தங்களது முழுமையான ஆதரவை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய ஒன்றிய பிஜேபி அரசு, தொழிலாளர் நலனுக்கு விரோதமாக, முதலாளிகள் மேலும் தொழிலாளர்களை ஒட்டச் சுரண்ட சட்ட ரீதியான உரிமையை வழங்கும் வகையில் தொழிலாளர் தொகுப்பு சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. இதை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். விவசாயிகள் நலன்காக்க நடத்தப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டத்தை தொடர்ந்து மத்திய அரசு பல்வேறு வாக்குறுதிகளை கொடுத்தது. ஆனால் விவசாயிகளுக்கு கொடுத்த எந்த வாக்குறுதியையும் இதுவரை நிறைவேற்றவில்லை. மாறாக விவசாயிகளை பழிவாங்கும் வகையில், மத் திய நிதிநிலை அறிக்கையில், கொள் முதல், உரமானியம், உணவுப் பாதுகாப்பு, பயிர்க்காப்பீடு போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதியை கடந்த ஆண்டைவிட பெருமளவு குறைத்து விவசாயிகளுக்கு துரோகமிழைத்துள்ளது.

தேசீய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான நிதியை ஆண்டு தோறும் குறைத்து அத்திட்டத்தையே சீர்குலைக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இந்த ஆண்டு 73000 கோடி மட்டுமே இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலும் கடந்த ஆண்டு வழங்க வேண்டிய கூலிபாக்கி 18000 கோடி ரூபாய் உள்ளது.

மீதியுள்ள 55 ஆயிரம் கோடி ரூபாயில் ஒரு குடும்பத்திற்கு 16 நாள் மட்டுமே இந்த ஆண்டு வேலை கிடைக்கும்.

ஒன்றிய பிஜேபி அரசின் இத்தகைய தொழிலாளர்கள், விவசாயிகள், பொது மக்கள் விரோதமான போக்கை கண்டித்து நடைபெறும் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கங்கள் சார்பில் மாநிலம் முழுவதும் மார்ச்28ந் தேதி ஆயிரத்திற்கு மேற்பட்ட இடங்களில் சாலை மறியல் போராட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நான்கு சங்கங்களின் தலைவர்கள் மாவட்ட அளவில் கூடிப் பேசி ஒன்றிய, நகர அளவில் சாலைமறியல் போராட்டத்திற்கு திட்டமிட்டு வெற்றிகரமாக்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கூட்டறிக்கையில் கூறியுள்ளனர்.

### திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

ஈரோடு வடக்கு மாவட்டம், ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் எஸ்.கந்தசாமி மகள் கே.மைத்ரேயி – எம்.கிஷோர் கிருஷ்ணா திருமண நிகழ்வின்போது, ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.1000 இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி. அவர்களிடம் வழங்கப்பட்டது.

ஜனசக்தி

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ.500/- |
| 2 ஆண்டுச் சந்தா | ரூ.1000/- |
| ஆயுள் சந்தா | ரூ.5000/- |

Janasakthi Trust
A/c No 108302000009999
IFSC No: IOBA 0001083
Indian overseas bank
Mylapore branch
Chennai - 600 004

# உயர்கல்வி வாய்ப்பை உடைத்தெறியும் தேசிய உயர்கல்வி வரைவு அறிக்கை



பேரா.கதிரவன்

**கடந்த ஜனவரி 2022 பல்கலைக்கழக மானியக் குழு பொது மக்களின் கருத்துக்கேட்பதற்காக உயர்கல்வி படிப்புகளில் கொண்டுவரப் போகும் மாற்றங்கள் பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. தேசியக் கல்விக் கொள்கை பரிந்துரைப் படி, கலை, அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளில் கொண்டுவரபோகும் மாற்றங்கள் சம்மந்தப்பட்டதாகும்.**

இவ்வறிக்கைக்கான கருத்தை பிரப்ரவரி 13ம் தேதிக்குள் அனுப்புமாறும் யூ.ஜி.சி. கூறியுள்ளது. அதில் தற்போது நடப்பில் உள்ள பட்டப்படிப்புகளில் செய்யபோகும் மாற்றங்கள் குறித்து விளக்கியுள்ளது. உதாரணமாக பி.எஸ்.சி. படிப்பு மூன்று ஆண்டுகள்(ஆறு பருவங்கள்) நடைமுறையில் உள்ளது. அதை

1. பி.ஏ./பி.எஸ்.சி./பி.இ. சர்டிபிகேட் (ஓராண்டு + வேலைக்கான 2மாத பயிற்ச்சி)
2. பி.ஏ./பி.எஸ்.சி./பி.இ. டிப்ளமோ (ஈரண்டாண்டுகள் + வேலைக்கான 2மாத பயிற்ச்சி)
3. பி.ஏ./பி.எஸ்.சி./பி.இ. பட்டப்படிப்பு (மூன்றாண்டுகள்)
4. பி.ஏ./பி.எஸ்.சி./பி.இ. ஹானர்ஸ் (நான்காண்டுகள்)
5. பி.ஏ./பி.எஸ்.சி./பி.இ. ஆராய்ச்சி (நான்காண்டுகள், அதில் ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம்). உதாரணமாக

பி.எஸ்.சி. என்ற ஒரு பட்டப் படிப்பு ஐந்து படிநிலை கொண்ட படிப்புகளாக, வேலைவாய்ப்பு, ஆராய்ச்சி மற்றும் மேற்படிப்பு எனப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது பி.எஸ்.சி. வேதியியல் பட்டப்படிப்பில் சேரும் ஒரு மாணவர் முதல் வருடம் வேலைக்கு செல்லவேண்டுமென்றால் முதல் வருடம் முடித்த பின் பி.எஸ்.சி. சான்றிதழ் பெறலாம். அல்லது இரண்டு வருடத்திற்கு பின் படிப்பை தெடர முடியவில்லை என்றால் பி.எஸ்.சி. டிப்ளமோ என முடித்து விட்டு வேலைக்கு செல்லலாம். ஒருவேளை மேற்படிப்பு படிக்க வேண்டு விரும்பினால் பி.எஸ்.சி. நான்காண்டுகள் கட்டாயம் படிக்கவேண்டும். மேலும் இதில் ஒவ்வொரு படிப்பில் பயிலும் மாணவருக்கு இருக்க வேண்டிய கற்றல் வெளிப்பாடுகள் குறித்தும் கூறப்பட்டுள்ளது. இதை 5 நிலையிலிருந்து நிலை 10 நிலை வரை பிரித்துள்ளனர். உதாரணமாக, பி.எஸ்.சி. சர்டிபிகேட் படிக்கும் மாணவருக்கு அவர் தேர்ந்தெடுத்த குறிப்பிட்ட துறையில் வேலை செய்வதற்கான தேவையான திறனை கற்றிருக்க வேண்டும். இது நிலை 5 என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

அதேபோல பி.எஸ்.சி. (ஹானர்ஸ்/ஆராய்ச்சி) படிக்கும் மாவணர் தான் தேர்ந்தேடுத்த பாடப் பிரிவில் ஆராய்ச்சி செய்வதற்கான முழுத்திறமையோடு வெளிவ்ரவேண்டும். இது நிலை 8 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதனொடு சேர்ந்து அரசியலமைப்பு, மனிதநேயம், நெறிமுறை மற்றும் தார்மீக மதிப்புகள் **(Constitutional, Humanistic, Ethical and Moral & Values)** சார்ந்தவைகளும் பாடமாக படிக்க வேண்டும் என்றுள்ளது.

பாடத் திட்டங்களை வகுக்கும் போது தற்பொழுது இளங்கலை பாடத்திட்டத்திற்கு ஆறு பருவ தேர்வுகள் நடைபெற்று வருகின்றன அதாவது இளங்கலை பட்டம் பெற வேண்டும் என்றால் ஆறு பருவ தேர்வுகள் முடித்திருக்க வேண்டும் இந்த ஆறு பருவ தேர்வுகளுக்கான பாடங்கள் மூன்று வருடங்களாக போதிக்கப்படுகின்றன, இந்த ஆறு பருவ தேர்வுகளுக்கான பாடங்களை முழுவதுமாக கற்றுக் உணர்ந்தால்தான் மாணவர்களுக்கு இளங்கலை என்ற பட்டம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் குறைபாடு

இந்த வரைவு அறிக்கை, கலைஅறிவியல் படிப்புகளையும் மற்றும் பொறியியல் / தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளையும் ஒரே பார்வையில் அணுகுகிறது. உதாரணமாக ஙிணி/ஙிஜிமீநீலீ மின்னனுப் பொறியியல் **(Electrical Engineering)** படிக்கும் மாணவர் இரண்டாண்டு படிப்பிற்கு பிறகு ஙிணி டிப்ளமோ முடித்து வெலைக்கு செல்கிறார் என்றால் பி.ஏ. (தமிழ்/வரலாறு) படிக்கும் மாணவர் இரண்டாண்டு படிப்பிற்கு பிறகு பி.ஏ. டிப்ளமோ முடித்து விட்டு என்ன வேலைக்கு எங்கு செல்ல முடியும்?

பொறியியல் மற்றும் தொழில் நுட்ப கல்வி பயிலும் இளங்கலை மாணவர்கள் தங்கள் முதல் வருடத்திலோ அல்லது இரண்டாம் வருடத்திலோ தங்களின் படிப்பை துறந்து வேலைக்கு செல்வதாக இருந்தால் அவர்கள் தற்போது படித்துக்கொண்டிருக்கும் அதே துறை சார்ந்த தொழிற்சாலைகளுக்கு பணியாற்ற அவர்களால் இயலும். ஏனென்றால் அவர்கள் தொழில் சார்ந்த கல்வியை இதுவரை படித்துக் கொண்டிருப்பதால். இதற்கு உதாரணமாக ஒரு இளங்கலை கட்டிட கலை தொழில் கல்வி **(Civil Engineering)** படிக்கும் மாணவன் தன்னுடைய படிப்பை நிறுத்தி வேலைக்கு செல்வதாக இருந்தால் தனக்கான கட்டிடக்கலையை தேர்ந்தெடுப்பார், இதுவரை தான் படித்த கல்வி அவருக்கு உதவக்கூடும், ஆனால் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கும் மாணவன் தன் இளங்கலை படிப்பை முதல் அல்லது இரண்டாம் வருடத்தில் படிப்பை துறந்தால் அவர் எந்த வேலைக்கு செல்லக் கூடும் என்பது மிகப் பெரிய கேள்விக் குறியே?

தற்பொழுது இளங்கலை படிக்கும் மாணவர்கள் அனைத்து விதமான அரசு பணிகளுக்கும் அரசு நடத்தும் தேர்வின் மூலம் அரசு பணி அல்லது தனியார் துறைகளில் பணி பெற முடியும். இதன் காரணமாக பெருவாரியான மாணவர்கள் இளங்கலை பட்டம் பெற்று வருகின்றனர், அல்லது பள்ளிக் கல்வி முடித்த மாணவர்கள் தங்கள் உயர்கல்வி படிக்க இயலவில்லை என்றால் அவர்கள் அரசு வேலை அல்லது முறைசாரா வேலைக்கு தேர்ந்தெடுத்து செல்கின்றனர். ஆனால் இளங்கலை பட்டப் படிப்பை தேர்ந்தெடுத்து அதை முழுவதுமாக கற்றுக் கொள்ளாமல் இடையில் படிப்பை துறந்தால் கால விரயம் மற்றும் பண விரயமும் ஏன் மனஉளைச்சல் கூட அதிகமாய் இருக்கும். அதுபோல் அனைத்து விதமான கலை மற்றும் அறிவியல் படிப்புகளையும் ஒருங்கிணைந்த தொழில் கல்வி பாடத் திட்டங்களுடன் போதிப்பது மாணவர்களை தனியார் தொழிற்சாலையை நோக்கி நகர்த்துவதாகவே அமையும். தொழில் தொழிற்கல்வி என்பது இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கு இன்றியமையாதது ஆனால் ஒட்டுமொத்த மாணவர்களின் கல்வியை தொழிற் கல்வியை மட்டுமே மையமாக கொண்டு நகர்த்திச் செல்வது என்பது நாட்டில் தனியார் தொழில் கூடத்திற்கு தொழிலாளர்களை உருவாக்குவதாக மட்டுமே அமையும். தொழில் கல்வி விகிதத்தை 26.3 விகிதத்தில் இருந்து 2035ல் 50 சதவீதமாக உயர்த்துவது என்பது நன்று, ஆனால் தற்போது பொறியியல் தொழிற்கல்வி முடித்த மாணவர்கள் இன்றும் அதற்க்கு ஏற்ற வேலை வாய்ப்பின்றி மிகவும் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்து வருகின்றனர், இதில் மேலும் மாணவர்களை தொழிற்கல்விக்கு மடை மாற்றுவதன் மூலம் நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் உருவாக்குமே தவிர, தேசிய கல்வி கொள்கை என்ன நோக்கத்திற்காக நாம் பயன்படுத்துகிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாமல் பெரிய ஏமாற்றத்தை தரும்.

இந்திய அளவில் உயர்கல்வி படிக்கும் மாணவர்களின் அளவு 27.1 சதவிகிதம் தான் உள்ளது. இந்த அளவு பிற வளரும் நாடுகளைவிட **(BRICS countries)** மிகக் குறைவு. இதுபோன்ற முறைகளால் மேலும் இது பாதிக்கும். இந்தியாவிலுள்ள மொத்தக் கல்லூரிகளில் 60.1 சதவிகித கல்லூரிகள் கிராமப்புறங்களில் உள்ளன. இச்சூழலில்

**இளங்கலைப் படிக்கும் மாணவர்கள் முதல் இரண்டாண்குக்குள்ளாவே சர்டிபிக்ட்/டிப்ளமோ மூலம் வேலைக்கு சென்றுவிடலாம் என்ற கருத்து கிராமப்புற மற்றும் சமுதாயப் பொருளாதார நிலைமைகளில் பிந்தங்கிய நிலைகளிலிருந்து வரக்கூடிய மாணவர்களை மேற்படிப்புகளை நோக்கி செல்வதற்கு பெரும் தடையாக அமையும். குறிப்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி கற்கும் மாணவர்களை குறைவான கூலி தொழிலாளர்களாகவும் அல்லது சுமாடோ/ பிக்பாஸ்கட் போன்றவற்றில் தொழிலாளியாகவே மாற்றுவதற்கான பரிந்துரையாகவே இது இருக்கும்.**

வரைவு அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள வழிகாட்டுதல் படி ஒரு கல்லூரியில் உள்ள ஒரு துறைக்கான இளங்கலை படிப்பிற்கு (அது இயற்பியலோ/வேதியியலலோ/தமிழோ/ பொருளாதாரமோ/ கட்டிடப் பொறியிலோ) ஐந்து பாடத்திட்டங்களை உருவாக்க வேண்டியிருக்கும். இதேபோல ஒவ்வொருத் துறைக்கும் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு கல்லூரியிலும் குறைந்தபட்சம் 8 லிருந்து 20 துறைகள் உள்ளன, ஒவ்வொரு துறைக்கும் ஐந்து பாட திட்டங்களை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு துறையும் குறைந்த பட்சம் இரண்டு டிப்ளமோ படிப்புகளையாவது நடந்த வேண்டும். கூடவே ஆராய்ச்சிக்கு தகுதியான மாணவர்களையும் உருவாக்க வேண்டும். இதனை நடைமுறைப்படுத்த பேராசிரியர்களும் அதன் கட்டமைப்பு வசதிகளும் அதிக நிதி ஒதுக்கீடும் தேவை. மற்றும் இதற்கு தேவையான ஆராய்ச்சி கூடங்கள் மற்றும் நவீன கருவிகள் தேவைப்படும் தற்பொழுது அனைத்து கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணிகள், பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

கலை மற்றும் அறிவியல் கல்வியை படிக்கும் மாணவர்கள் தொழிற் கல்வியை படிப்பதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? என்று தெரியவில்லை கலை அறிவியல் கல்வியை ஒன்று அல்லது இரண்டு வருடங்களில் படித்துவிட்டு தொழில் கல்வியை படிக்க வேண்டிய எந்த அவசியமும் நிர்பந்தமும் இல்லை, அதற்கு பள்ளிக்கல்வியை முடித்தபின் நேரிடையாகவே தொழில் கல்வி படித்திருக்க முடியும். விருப்பம் இல்லாததால் தான் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி படிப்புகளை தேர்ந்தெடுக்கின்றனர்.

தொழில் கல்வியை தேர்ந்தெடுக்காமல் கலை அறிவியல் கல்வியை தேடுவதன் நோக்கமே அலுவல் சார்ந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் அமர்வதற்காக தான், இதில் அவர்களை தொழிற்கல்விக்கு மறைமுகமாக நாம் மடைமாற்றம் செய்கிறோமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

**AISHE** அறிக்கையின் படி, இந்தியாவிலுள்ள கல்லூரிகளில் 80 சதவிகிதம் தனியார்களாலும் 20 சதவிகிதம் அரசினாலும் நிர்வகிக்கப்படுபவை. உயர்கல்விக்கென ஒதுக்கப்படும் மத்திய மாநில அரசின் நிதியும் படிப்படியாக குறைக்கப்பட்டு அதனிடத்தில் தனியார்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் விளைவாக அர்சு கல்லூரிகள் பேராசிரியர்கள் பற்றாக்குறையாலும் நிதி ஒதுக்கீடு குறைவாலும் ஊழல் முறைகேடுகளாலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தனியார் கல்லூரிகளோ லாபத்தினை மட்டுமே இலக்காகக் கொண்டு அனைத்து வகையான விதிமீறல்களுடன் தான் இயங்குகின்றன. உயர்கல்வியின் சீரழிந்த நிலையை கொரேனா ஊரடங்கு வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது. இச்சூழலில் யூ.ஜி.சி.யின் மேற்கண்ட வழிகாட்டுதல்களானது இந்திய உயர்கல்வியை மேலும் சீரழிப்பதுடன் உயர்கல்வியில் தனியார்களை மேலும் வலுவடையவே செய்யும்.

வேலைப்புக்கு தேவையான திறனுள்ள மாணவர்கள் இல்லை என்று கூறுகின்றனர். அதற்காகவே பாடத்திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என வாதிடுகின்றனர் அதிகாரிகள். கடந்த பல ஆண்டுகளாக தேவையான புதிய வேலைவாய்ப்புகள் உருக்கப்படவில்லை என்பது அரசின் தரவுகளிலிருந்தே அறிந்து கொள்ள முடியும். மேலும் உருவாக்கப்பட்ட வேலைகளும் படிப்புக்கேற்ற வேலைகளாக இல்லை**(Under employment)**. **CMIE** அறிக்கையின் படி 2018 ல் 4.7 % மாக இருந்த வேலையின்மை விகிதம் **(Unemployment rate)** 2021 ல் 7.9 % உயர்ந்துள்ளது. குறிப்பாக வேலையின்மையால் 1830 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் **MGNREGA** திட்டத்தில் கிராமப்புற வேலைகளுக்கு செல்வது அதிகரித்துள்ளது**(last five years average ~8% of total MGNREGA registration)**. இது அரசின் பொருளாதாரக் கொள்கையின் விளைவு.

கல்வி சேமிப்பு வங்கி, கற்றலை செழுமைப்படுத்துவது **(Academic Credit Bank, Blended learning)** பற்றி அறிக்கை குறிப்பிடுகிறது. இவற்றின் மூலம் வருங்காலங்களில் இணையவழிக் கல்வி முறை உயர்கல்வியில் ஒரு அங்கம் என யூ.ஜி.சி. அறிவித்துள்ளது. ஊரடங்கு காலத்தில் இணையவழி கற்றல்கற்பித்தல் முறையானது மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவில்லை என்பதற்கு பல ஆதாரங்கள் வெளிவந்து விட்டன. இருப்பினும் மத்திய மாநில அரசுகள் தொடர்ந்து இணையவழி கற்றல்கற்பித்தலை ஊக்குவித்தே வருகிறது. இது தனியார் **edu-tech**நிறுவனங்களை ஊக்குவிக்கவே பயன்படும். உயர்கல்வியில் கடந்த பத்து வருடங்களாக கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப் படிப்பிற்கு மதிப்பீடு புள்ளி **(Credit Point)** நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலம் ஒரே இந்தியா ஒரே பாடத்திட்டம் என்ற முறையில் இதை நடைமுறைப் படுத்தலாம், ஆனால் தேசிய கல்விக் கொள்கையில் உள்ளபடி கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என உள்ளதே தவிர தனியார் கல்லூரிகள், தனியார் பல்கலைக்கழகங்கள், இணையவழி பல்கலைக்கழகங்களில் பற்றிய எந்தவித தெளிவான விதிமுறைகளும் இல்லை, இதன் மூலம் ஒரு மாணவர் சென்னை பல்கலைகழகத்தில் தேர்வு எழுதி வெற்றி பெற முடியாமல், அதாவது இரண்டாம் வருடத்தில் அல்லது மூன்றாம் வருடத்தில் ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அல்லது இணையவழி பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அவர்கள் எதிர்பார்த்த மதிப்பீடு புள்ளியை பெற்று பட்டத்தை பெறலாம் என்ற சூழ்நிலையை ஊழியர்களுக்கான அடிப்படையை இந்த கல்வி வங்கி கணக்கு நமக்கு புரிய வைக்கின்றது..

எனவே மேற்சொன்ன காரணங்களினால் ஆசிரியர், மாணவர்கள் மற்றும் பெரும்பான்மை மக்களின் நலங்களுக்கு நேரெதிரான விளைவுகளையே இது ஏற்படுத்தும். விளிம்பு நிலை, ஏழை, எளிய மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பை பாதிக்கும். இதனை முற்றாக துடைத்தெறிய அனைவரும் போராடுவதே ஒரே வழி!




தொடர்புக்கு: 86673 38638



# சங்கே முழங்கு!

### கோகுல்ராஜ் கொலை வழக்கில் மதுரை சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பு

# சாதி வெறிக்கு கடும் எச்சரிக்கை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

பொறியில் கல்லூரியில் பயின்று வந்த ஓமலூர் கோகுல் ராஜ் நாமக்கல் சுவாதி இருவரும் நெருக்கமான நண்பர்களாக பழகிவந்தனர். கடந்த 2015 ஜூன் 23 ஆம் தேதி இருவரும் சேர்ந்து திருச்செங்கோட்டில் உள்ள கோவிலுக்கு சென்றுள்ளனர். இவர்களது நட்பை விரும்பாத சாதி வெறியர்கள் கும்பலாக சேர்ந்து 23.06.2015 ஆம் தேதி கோகுல்ராஜை கடந்தி சென்று' கொடூரமாக கொலை செய்து, பள்ளிப்பாளையம் அருகில் தொடர்வண்டி பாதையில் துண்டிக்கப்பட்ட கோகுல்ராஜுவின் உடலை வீசி எறிந்துள்ளனர்.

சட்டத்தின் ஆட்சிக்கும், சமூக வாழ்வுக்கும் பேரதிர்ச்சி அளித்த இந்தக் கொடூர சாதி வெறிக் கும்பலின் கொலை வழக்கு நாமக்கல் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையை மேற்கொண்டு வந்த காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் விஷ்ணுப் பிரியா 2015 செப்டம்பர் 18 ஆம் தேதி தற்கொலை செய்து கொண்டார்.

இதன் தொடர்ச்சியாக கோகுல்ராஜின் தாயார் வி.சித்ரா, நாமக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கை சேலம் அல்லது ஈரோடு மாவட்ட நீதிமன்றங்களில் ஏதேனும் ஒன்றுக்கு மாற்றும்படி உயர்நீதிமன்றத்தை அணுகினார். கோகுல்ராஜ் கொலை வழக்கை மதுரை பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குயினர் வன்கொடுமை தடுப்பு வழக்குகள் தொடர்பான சிறப்பு நீதி மன்றத்துக்கு மாற்றி உத்தரவிட்டது.

இதற்கிடையில் சிறையில் இருந்த யுவராஜ் தனக்கு பிணை வழங்குமாறு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டார். இவரது வழக்கின் தன்மை அறிந்த உச்சநீதி மன்றம் அதிர்ச்சியை வெளிப்படுத்தியதுடன் “பிணை கேட்பு மனுவை” தள்ளுபடி செய்தது.

இந்த வழக்கில் தொடர்புடைய சாட்சிகள் அனைத்தும் பிறழ்சாட்சியானது பேரவலமாகும். இருப்பினும் வழக்கில் தொடர்புடைய ஆவண சாட்சியங்களை அறிவியல் கண்ணோட்டத்துடன் கூர்ந்து ஆய்ந்தும், பகுப்பாய்வு செய்தும் மதுரை சிறப்பு நீதிமன்றம் ஆதாரங்கள் அடிப்படையில் குற்றங்களை உறுதி செய்து குற்றவாளிகளை அடையாளப்படுத்தி அறிவித்துள்ள மதுரை சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு, சாதி வெறி சக்திகளுக்கு மீண்டும் ஒரு கடும் எச்சரிக்கையாக அமைந்திருக்கிறது. இந்த சிறப்பு வாய்ந்த தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனை குற்றங்களை குறைக்கும் கடும் நடவடிக்கையாக அமைய வேண்டும் என நாடு எதிர்பார்க்கிறது.

கோகுல்ராஜு வின் கொடூர கொலை வழக்கு தொடர்பான ஆவண சாட்சியங்களை மிகப் பொருத்தமாக எடுத்துக் கூறி, குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடக் கூடாது என்பதில் கூடுதல் முனைப்புக் காட்டி வழக்காடியுள்ள அரசின் கூடுதல் சிறப்பு வழக்கறிஞர் ப.பா.மோகனுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இந்த வழக்கில் தொடர்புள்ள ஒருவர் தப்பித்து, தலைமறைவாகி விட்டதாக கூறியிருப்பது காவல்துறையின் பணி மீதான விமர்சனமாகும். அவரை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த வழக்கு சாதிவெறி ஆணவக் கொலைகளை தடுக்க தனி சட்டம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை திரும்ப, திருப்ப வலியுறுத்துகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வரும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் சாதிவெறி ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

மேலும் இதில்

**முதல் குற்றவாளி யுவராஜுக்கும். அவரது கார் ஓட்டுநர் அருணுக்கும் மூன்று ஆயுள் தண்டனையும், அபராதமும் அறிவிக்கப்பட்டுள்ளது. மற்ற குற்றவாளிகளுக்கு தலா இரண்டு மற்றும் ஒரு ஆயுள் தண்டனையும், அபராதமும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

மதுரை சிறப்பு நீதிமன்றம் அறிவித்துள்ள தண்டனை சமுகத்தில் மனிதத் தன்மையை இழந்து அலையும் ஆதிக்க சக்திகளுக்கு கடுமையான எச்சரிக்கையாகும்.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



தி.இராமசாமி

# கொள்கை அரசியல்



**காரல் மார்க்ஸ் ஏங்கல்ஸ் போன்றவர்கள் மனித சமூகத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆராய்ந்தார்கள். மனித சமூகத்தை வர்க்க சமூகமாக அடையாளப்படுத்தினார்கள்.**

உழைத்து கூலி பெறுபவர் உழைப்பாளியாகவும், உற்பத்தி கருவிகளை உடமையாக கொண்டவர்கள் உழைப்பை சுரண்டுபவர்கள் உடைமையாளர்கள் என்றும் பிரித்துக் காட்டினர். இதன் மீது மனித சமூகத்தில் மதம், சாதி, மொழி, இனம் என்று செயல்பட்டது. மதம், சாதி என்பவை உழைக்கும் மக்களுக்கு எதிராக வர்க்க சிந்தனையை திசை திருப்ப பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவில் இந்து மதம் வைதீக பிராமனர்களால் உருவாக்கப்பட்டது. மத்திய ஆசியாவில் இருந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்கு ஆரியர்கள் வந்தார்கள். ஆடு, மாடு மேய்க்கும் நாடோடிகளாக இந்தியா வந்தார்கள். வளர்ச்சிப்போக்கில் ஆரியர்கள் பிராமனர்கள் ஆனார்கள். பிராமனர்களின் ஒருபகுதி வேதங் களையும், உபநிடதங்களையும் உருவாக் கினார்கள். இவர் கள் வைதீக பிராமணர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

இவர்கள்தான் ரிக், யஜீர், சாமம், அதர்வனம் என்றும் நான்கு வேதங்களையும், பின்பு இந்து மதத்தையும் உருவாக்கினார்கள். சனாதன தர்மம் என்று மனு உருவாக்கிய மனித பிறப் பில் வேறுபாடுகள், பிராமனன், சத்தி ரியன், வைசியன் சூத்திரன் என்ற நான்கு வர்ணங்களை உறுதிபடுத் தினார்கள்.

தொழில் அடைப்படையில் உருவான குழுக்கள் வளர்ச்சி போக்கில் சாதியாக மாற்றி விட்டார்கள். இந்து மதமும் சாதியும் இந்தியாவில் நுழைந்த ஆரியர்களால் உருவாக்கப்பட்டது. இஸ்லாம் மதமும், கிருஸ்தவ மதமும் வெளிநாட்டில் உருவாகி இந் தியாவிற்குள் நுழைந்தன.

இந்து மத சமத்துவமின்மை காரணமாக பௌத்தமதம், சமண மதம் உருவானது. சனாதன வாதிகளால் உருவாக்கப்பட்ட மதங்களும், சாதிகளும் சமூக வளர்ச்சிக்கு முன் னேற்றத்திற்கு தடையாகத்தான் இருந்து வந்துள்ளது.

இந்து, முஸ்லீம், கிறிஸ்து, பௌத்த, சீக்கிய மத வழிபாட்டு முறைகள் பழக்க வழங்கங்களில் வித்தியாசம் ஏற்படுகிறது. மாறுபாடுகள் இருக்கின்றது. இதை கடைபிடிப்பவர்களில் தனிப்பட்ட உரிமை யாரும் எந்த மதத்தையும் அது சார்ந்த பழக்கவழக்கங்களையும் கடைபிடிக்கலாம்.

ஒரு மதம் இன்னொரு மதத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதையும் ஆவேசம் கொள்வதையும் அதனால் கலவரம் உருவாக்கப்படும் போது தான் சமூக தீங்காக மாறுகிறது. ஒரே மதத்திற்குள் உட்பிரிவுகளின் அடிப்படையிலும் மோதல்கள் நடக்கின்றன. காரணம் ஆதிக்கப் போக்குத்தான் அதேபோல் சாதிய அடையாளத்துடன் அரசியல் கட்சிகளும் உருவாகி செயல்பட்டு வருகிறது.

சாதீய அடையாளத்துடன் செயல்படுவர்கள் எளிதில் அவர்கள் சார்ந்த மக்கள் பகுதியை எளிதில் திரட்டமுடிகிறது. இது சமுதாய வளர்ச்சிக்கு பயன்படுகிறதா! இல்லை மாறாக தீங்கு விளைவிக்கிறது.

சாதிய அரசியல் கட்சிகள் தங்கள் சாதி சார்ந்த அரசியல் முன்னுக்கு வர வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் செயல்படும் பிற அரசியல் கட்சிகள் மீது துவேசத்தை விதைக்கிறார்கள் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள.; அதற்கான முயற்சியில் ஈடுபட்டு முரண் பாட்டில் சிக்கி, மதம் ஆதிக்கம், சாதி ஆதிக்கம், மொழி ஆதிக்கம், மூன்றும் ஒன்றினையும் இடத்திற்கு சென்று விடுகிறார்கள் இவை பாசிசத்தின் வெளிப்பாடுகள்.

சுதந்திரத்திற்காக போராடிய தலைவர்களுக்கு சிலை வைக்கப்பட்டு விழா எடுக்கப்படுகிறது. இந்த சிலைகளில் சில குறிப்பிட்ட தலைவர்களின் சிலை தவிர பெரும் பகுதி தலைவர்களின் சிலைகள் ஒரு நிர்ப்பந்தம் தேவையின் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள்; சாதி பார்த்து போராடவில்லை. ஆனால் அவர்களின் புகழை அவர் சார்ந்த சாதியை சார்ந்தவர்கள் சமுதாயத்தின் முன் கொண்டு வருகிறார்கள் அப்படி கொண்டு வருவதின் மூலம் சமூகத்தில் அந்த தலைவர் பிரபலமாகிறார் அரசும் அத்தலைவரை செயலுக்கு மதிப்பளித்து சிறப்பு செய்கிறது. தலைவர்களை சாதிக்குள் கொண்டு சென்றுவிட்டார்கள் என்ற ஆதங்கம் தேவையில்லை அந்த தலைவர்களின் மூலம் சுதந்திர போராட்ட வரலாறு, மக்கள் ஒற்றுமை பேணுகின்ற வரலாற்றை அந்த சமூகத்திற்குள் கொண்டு செல்ல பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மொழி, இனம் பொதுவானது மதத்தை பின்பற்றுவர்கள் சாதியை அரசியல் படுத்துபவர்கள் அனைவருக்கும் பொதுவானது. ஆனால் இன்று தமிழகத்தில் தமிழர்களுக்குள்ளே பிரிவினையை உருவாக்கும் நோக்கத்தில் தமிழகத்தில் பிறந்து, வளர்ந்து. வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடையே மொழி அடையாளத்தை காட்டி ஆதிக்கப் போக்கில் பிளவுபடுத்தும் வேலையை சீர்குலைவு வேலையை திட்டமிட்டு தமிழ் தேசீயம் என்ற பெயரில் சில சக்திகள் செயல்பட்டு வருகிறார்கள்.

**மதத்துவேசத்தை வைத்து மற்ற மதங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது. துவேசம் கொள்வதும் தமிழ் தேசீயம் பேசி தமிழ்நாட்டில் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் போக்கும் இரண்டு ஒன்று தான். எனவேதான் இவர்கள் இருவரும் ஒரு இடத்தில் ஒன்றினைகிறார்கள் இவர்கள் தான் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் சக்தியாக இருக்கிறார்கள்.**

மத உணர்வை துர்ண்டி மற்ற மதத்தின் மீது ஆதிக்கம் செலுத்துபவர்கள் தன் பெருமை பேசுபவர்கள் அதே போல் சாதிகளிடையே ஆதிக்கம் செலுத்தி தன் சாதி பெருமை பேசுவர்கள் மொழி உணர்வை துர்ண்டி ஆதிக்க உணர்வையும் பிளவுபடுத்தும் வேலையையும் செய்யும் சக்திகள் அனைவரும் ஒரே இடத்தில் சங்கமிக்கிறார்கள் இவர்கள் ஒரு கட்டத்தில் பாசிசத்திற்கு ஆதரவாக அடையாமாக செயல்படுகிறார்கள்.

அரசியல் கட்சிகள் கொள்கைகள் அடிப்படையில் செயல்படுகின்றன. கொள்கைகளில் வித்தியாசம் இருப்பது போல் அவர்களின் அரசியலிலும் வித்தியாசம் உள்ளது.

இவைகளின் கம்யூனிஸ்ட் கட்சி வர்க்கப் போராட்ட அடிப்படையில் கொள்கையுடன் செங்கொடி சிகப்பு துண்டுகள் நடைமுறையில் எளிமை, நேர்மை, என்பதற்கு எடுத்துக் காட்டாக செயல்படுகிறது. கம்யூனிஸ்ட்களின் நேர்மையை சந்தேகப்படுகின்ற அளவுக்கு எவ்வித பிரச்சனையும் இதுவரை எழவில்லை.

தொடர்புக்கு: **9443363828**

## பெண்ணின் படிக்கும் உரிமை

கல்லூரிகளுக்கு ஹிஜாப் அணிந்து வருவதைத் “தடை” செய்ததை ஆதரிப்பதன் மூலம் கர்னாடகாவின் பாஜக அரசு மாணவர்களின் அடிப்படை சுதந்திரங்களை மீறுகிறது; பொது வாழ்வில் ஒதுக்கி வைத்தல் எனும் நடத்தைநெறியை வளர்க்கிறது.

உடுப்பியின் ஒரு கல்லூரி மற்றும் அதன் மாணவர்களுக்கு இடையே முரண்பாட்டைத் தணிப்பதற்கு வழிவகைகளைக் காண்பதற்கு மாறாக, கர்நாடகா மாநில அரசு, பிரச்சனையின் தீவிரத்தை இரண்டு மடங்காக்கி விட்டது; மாநில அரசு, கர்னாடகா கல்விச் சட்டம் 1983ல் மேலும் சில விதிகளை ஏற்படுத்தி, “சமத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் பொதுச் சட்டம் ஒழுங்கைப் பாதிக்கும் உடைகளை அணியக் கூடாது என்பதை உறுதி செய்ய” மாநிலத்தின் அனைத்துக் கல்லூரிகளையும் அறிவுறுத்தி உத்தரவிட்டுள்ளது. ஏற்க முடியாத குழப்பங்களோடு வரையறுக்கப்பட்ட இந்த விதி மாற்றம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் சோதனைக்கு முன் நிற்க முடியாது; ஏனெனில், அரசியலமைப்புச் சட்டம் குடிமக்களுக்குச் சமத்தன்மைக்கான உரிமை, கல்வி பெறும் உரிமை மற்றும் அவர்களது மத நம்பிக்கைகளைப் பின்பற்றி நடப்பதற்கான உரிமைகளை வழங்கி உறுதி செய்துள்ளது.

கர்னாடகா அரசு நடவடிக்கையின் தீவிரப் பின்விளைவு, பள்ளி, கல்லூரிகளின் நுழைவாயில்களை அடைவதற்கே ஏராளமான தொல்லைதரும் பிரச்சனைகளைச் சந்தித்த இளம் பெண்களைக் கல்வி நிலையங்களிலிருந்து கட்டாயப்படுத்தி துரத்தி விடுவதாகும்.அது வகுப்பறைகளிலிருந்து துரத்தப்பட்ட இளம்பெண்களை மீண்டும் அவர்களது வீட்டுச் சிறைகளில் அடைத்துவிடும். மேலும், மதக் கல்வி நிலையங்களில் அடையச் செய்யும். இந்த நடவடிக்கையின் மூலம் பாஜக மிகவும் தற்பெருமை பேசி தம்பட்டமடித்துக் கொள்கிறது.

பெண்களின் கல்விக்கான “பெண் குழந்தைகளைப் பாது காப்போம், பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம்’ மும்முறை தலாக் வழக்கத்திற்கு எதிரான சட்டம் கொண்டு வந்தோம் என்றெல்லாம் சாதனைகளை உரக்கக் கூவி நிற்கிறது.

மேலும் முஸ்லீம் பெண்களுக்குக் கல்வி அளிக்க கடுமையாகப் போராடிப் பெற்ற பலன்களை மிகவும் பொறுப்பற்ற முறையில் ஆபத்துக்கு உள்ளாக்கியது. சகவாழ்வு என்ற பொது அறிவுடன் ஒன்றிணைந்து தங்கள் வாழ்வை நடத்தும் பலபல இலட்சம் இந்தியர்களின் உணர்வில், மதச்சார்பின்மைக்கான இடங்களில் வழக்கமாக மதப்பற்று மிகுந்த மதவாதம் செயல்படுவதைக் காணலாம்.



(நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ் தலையங்கத் திலிருந்து)



# போரை நிறுத்திடுக! பேச்ச

-டி. ராஜா

உக்ரைனில் தற்போது நடைபெற்று வரும் இராணுவத் தாக்குதல் உலக அரங்கின் மையப் பகுதியை ஆக்கிரமித்துள்ளது. உக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்களில் நடைபெற்று வரும் ரஷ்ய இராணுவத் தாக்குதல் மற்றும் இரு தரப்பினருக்கும் இடையே நீடித்து வரும் கடுமையான வாக்குவாதங்கள், அந்நாட்டின் போர் சூழ்ந்த பகுதிகளுக்கு அப்பால் நெடுந்தொலைவில் உள்ள, பகைமையுணர்வு மற்றும் போர்வெறி கொண்டவர்களும் பங்கேற்கும் முழு அளவிலான போராக இந்தத் தாக்குதல்களை மாற்றிவிடக் கூடும் என்பதை உணர்த்துகின்றன.

இந்தியாவிலும் கூட, மக்கள் இந்த மோதல் தொடர்பான அச்சவுணர்வை வெளியிட்டு வருகிறார்கள். நாடுகள் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ள இன்றைய உலக அமைப்பில், புவிசார் அரசியல் சக்திகளுக்கு இடையே நடைபெற்று வரும் மோதலில் இருந்து நாம் ஒதுங்கிக் கொள்வது என்பது சாத்தியமன்று. எனவே, ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே நடைபெறும் மோதலுக்கான காரணங்களைக் கண்டறிந்து நாம் உரிய நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

போல்ஷிவிக் புரட்சிக்குப் பின்னர், பல்வேறு பண்பாடுகள் மற்றும் இனங்களைக் கொண்ட சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய (National Self-determination) உரிமைக்காக லெனின் வலுவான ஆதரவுக் குரலெழுப்பினார். சோவியத் ஒன்றியத்தின் அரசமைப்பு இந்தப் பன்மைத்துவதை அங்கீகரித்தது. சோவியத் ஒன்றியத்தில் பல்வேறு இனங்களும் இணக்கமான வாழ்வை மேற்கொள்வதற்கான சரத்துகள் மட்டுமின்றி ஒன்றிய அமைப்பில் இருந்து பிரிந்து செல்வதற்கான உரிமையும் (Right to Secede) அரசமைப்பில் இடம்பெற்றிருந்தது.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் அரசு நாஜிக்களை வெற்றி கொண்டதும், உலகம் முழுமைக்குமான சோஷலிசத்தின் அறைகூவலும், வாஷிங்டன் மற்றும் லண்டனில் இருந்த முதலாளித்துவ சக்திகளைக் கலக்கமுறச் செய்தன. மானுட விடுதலைக்கான சோஷலிசத்தின் வீறுநடையைத் தடுத்து நிறுத்திட வேண்டும் என்ற மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளின் கவலையானது, பனிப்போர் சூழலில் ஒரு இராணுவ கூட்டணிக்கு வித்திட்டது; 1949 ஆம் ஆண்டில் நேட்டோ (North Atlantic Treaty Organisation) அமைப்பு உருவானது. தொடக்க காலத்தில் இருந்தே, ஐரோப்பாவில் ஒரு வலுவான இராணுவ கட்டமைப்பை நிலைப்படுத்துவதே நேட்டோ அமைப்பின் பாத்திரமாக இருந்து வருகிறது.

சோவியத் ஒன்றியம் மற்றும் அதனுடன் நட்புறவு கொண்டிருந்த சோஷலிச நாடுகளையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்ற முதன்மையான குறிக்கோளுடன் அமெரிக்காவின் அயலுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் ஒரு கருவியாகவே நேட்டோ அமைப்பு செயல்பட்டு வருகிறது.

சோவியத் ஒன்றியம் சிதைவுற்ற பிறகு நேட்டோ அமைப்பு நீடித்திருக்க வேண்டியதில்லை. ஆனால், நேட்டோ அமைப்பு தொடர்ந்து இயங்கி வருவதுடன், விரிவடைந்தும் வருகிறது. இந்தப் போக்கு, 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் நேட்டோ அமைப்பு கிழக்குப் பகுதிகளில் இராணுவ விரிவாக்கத்தை மேற்கொள்ளாது என்றும், ரஷ்யப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தாது என்றும் அளிக்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு எதிரானது ஆகும்.

கிழக்கு ஐரோப்பிய பகுதிகளில் நேட்டோ அமைப்பின் இராணுவ விரிவாக்கம், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பல நாடுகள் நேட்டோவில் சேருவதற்கான வாய்ப்பு மற்றும் இராணுவ செலவின அதிகரிப்பு ஆகியவற்றால் அமெரிக்காவின் இராணுவதொழில் துறை பெரிதும் பயனீட்டியது.






**நேட்டோ அமைப்பு உருவான போது, 12 நாடுகள் உறுப்பினர் களாக இருந்தன. தற்போது அந்த எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளதோடு, அவற்றில் 28 உறுப்பு நாடுகள் ஐரோப்பா கண்டத்தில் உள்ளன. ரஷ்யாவைத் தவிர்த்து, முன்பு வார்சா ஒப்பந்தத்தில் உறுப்பினர்களாக இருந்த நாடுகளும் நேட்டோ அமைப்பில் உறுப்பு நாடுகளாகச் சேருவதற்கான வாய்ப்பு 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ரஷ்ய எல்லைகளில் நேட்டோவின் விரிவாக்கம், நீண்ட தொலைவு சென்று தாக்கும் ஏவுகணைகளை போலந்து நாட்டில் நிறுத்தி வைத்திருப்பது உள்ளிட்ட நேட்டோவின் நடவடிக்கைகள், ரஷ்யாவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் மற்றும் ஐரோப்பாவில் அமெரிக்க மேலாதிக்கத்தின் ஏஜெண்டாக நேட்டோ செயல்பட வேண்டும் என்ற அந்த அமைப்பின் புதிய நோக்கத்தைத் தெளி வாகச் சுட்டிக்காட்டுகிறது. நேட்டோ அமைப்பின் இராணுவ விரிவாக்கம் குறித்து கடந்த இருபது ஆண்டுகளாக ரஷ்யா தெரிவித்து வரும் கவலைகள் நியாயமானது ஆகும்.**


உக்ரைன் நாட்டின் கிழக்குப் பகுதிகளில் உள்ள ரஷ்ய மொழி பேசும் சிறுபான்மைச் சமூகத்தின் மீதான தாக்குதல்கள், அந்தப் பகுதியில் தொடரும் அமெரிக்க தலையீடு ஆகியவற்றில் இருந்து தான் தற்போதைய மோதல் வெடித்துக் கிளம்புகிறது.

---



-பி.எஸ்.மாசிலாமணி

கடந்த ஜனவரி 19 அன்று போயிங் விமான நிறுவனத்தின் அறிவுறுத்தலால் 8 போயிங் விமானங்கள் அமெரிக்கா சென்று வருவதை ஏர் இந்தியா ரத்து செய்வதாக அறிவித்தது. அமெரிக்காவின் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் 5ஜி அலைக்கற்றை சேவையை அன்று தொடங்கின. இதன் புதிய கூடுதல் கதிர்வீச்சால் போயிங் விமானங்களின் அல்டி மீட்டர் உள்ளிட்ட சேவைகள் பாதிப்பு ஏற்பட்டால் விமானங்களின் பயணத்திற்கே ஆபத்து ஏற்படும் என்பதே இதன் காரணமாகும்.



> **மனிதனின் கைகள் உழைப்புக்கான கருவிகள் என்பது மட்டுமல்ல. இந்த மனிதனின் கைகள் என்பது உழைப்பின் விளைபொருள் என்பதும் ஆகும்.**
> **– ஏங்கல்ஸ்**

புதிய தொழில் நுட்பங்களை அமல் படுத்துகிற போது அதனால் ஏற்படும் எதிர்வினைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற நியதி இதில் கையாளப்பட்டுள்ளது .

எந்தத் திட்டம் யாருக்காக போடப்படுகிறதோ... அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுமா என்ற அக்கறையோடு பார்த்தால், இணையவழி கொள்முதல் கொண்டு வந்திருக்கக் கூடாது.

வெளி மாவட்டங்களில் இருந்து டெல்டா மாவட்டங்களுக்கு கொண்டு வந்து விற்கப்படும் நெல்லை தடுக்கவே இந்த ஏற்பாடு என்றும் ஒரு செய்திபரப்பப்படுகிறது.. வெளி மாவட்டங்களின் நெல் இங்கு கொண்டு வந்து விற்பனை செய்யப்படுவதால் தான் இன்சூரன்ஸ் திட்ட இழப்பீடு டெல்டா விவசாயிகளுக்கு உரிய அளவு கிடைப்பதில்லை என்ற பரவலான பேச்சு விவசாயிகளிடம் உள்ளது. நெல் கொள்முதலை அடிப்படையாகக் கொண்டு இழப்பீடு நிர்ணயிப்பது இல்லை என்பதே உண்மை. வெளி மாவட்டத்தில் இருந்து வரும் நெல்லை இங்கே கொண்டு வந்து விற்பனை செய்வதை தடுப்பதற்காக மட்டும்இந்த புதிய திட்டம் இல்லை என்பதுதான் உண்மை.

ஒன்றிய அரசு நெல் கொள்முதல் பொறுப்பில் இருந்து மெல்ல விலகவே இந்த புதிய திட்டம் ஆகும். காட் ஒப்பந்தத்தில் இந்தியா இணைந்து உலக வர்த்தக நிறுவனத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் உலக நாடுகள் சில... நெல், கரும்பு, கோதுமை ஆகியவைகளை இந்தியா ஏற்றுமதி செய்து வருவதை முடக்கிட தவறான சில பிரச்சனைகளை எழுப்பி வருகிறது. இது வழக்குகளாக விசாரணையில் உள்ளது. இப்படியான பிரச்சனைகள் நமது நாட்டு விவசாயிகளுக்கு எதிராக வரும் என்பதால்தான் WTO..ல் இந்தியா இணைவது ஆபத்து என்ற எச்சரிக்கை அப்போதே விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் நெல் உற்பத்தியை குறைத்திடும் நிலையில் ஒன்றிய அரசு நெல் சாகுபடி பரப்பை குறைத்திட மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தை முன்மொழிந்து அதற்கான திட்டமிடல் தற்போது நடந்து வருகிறது. ஜனவரி 11 அன்று தமிழக வேளாண் துறை ஏற்பாட்டில் தமிழக தலைமைச் செயலாளர் மற்றும் 4

## நெல் கொள்முதல்




மாநில வேளாண் வல்லுனர்கள்.. பங்குகொண்ட.. மாற்றுப்பயிர் சாகுபடிக்கான திட்டங்கள் கலந்துரையாடப்பட்டது. அதில்நான் பங்கு கொண்டு.. நிலத்தடி நீர் பாதுகாப்புக்காகவும் . விவசாயிகள் வருமானத்திற்கான பல்வகைப் பயிர் மற்றும் அதற்கான தொழில் நுட்ப தேவைகள் குறித்தும் பேசினேன்.

23 வேளாண் பொருட்களுக்கு தான் அரசு ஆதார விலையை நிர்ணயித்துள்ளது. இது நியாயமான விலையாக இல்லை என்றாலும்,. அவைகளை கொள்முதல் செய்திட ஓரளவு அரசுக்கும் பொறுப்பாகிறது . இந்த சூழலில் வேளாண் கமிஷன் பரிந்துரைப்படி வேளாண் விளை பொருட்கள் அனைத்திற்கும் சி2+ என்ற அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து.. அரசு கொள்முதலை சட்ட பூர்வமாக்கினால் ஒன்றிய அரசு இதற்கு முழுபொறுப்பேற்க வேண்டிவரும். அரசின் இந்த முறையிலான ஏகபோக கொள்முதலுக்கு பல்லாயிரம் கோடி ரூபாய்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிவரும்.

எனவேதான் ஒன்றிய அரசு இவைகளை சட்டமாக்கிட மறுத்து

# சுவார்த்தையைத் தொடங்கிடுக!



அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்ற போராட்டங்களுக்குப் பிறகு உக்ரைன் அதிபர் விக்டர் யானுகோவிச் அப்பொறுப்பில் இருந்து வெளியேற்றப்பட்டது இதற்கு எடுத்துக்காட்டு ஆகும். உக்ரைன் இராணுவப் படையினருடன் கூட்டு இராணுவப் பயிற்சி மற்றும் அதிநுட்ப ஆயுதங்களை உக்ரைன் நாட்டுக்கு அனுப்பி வைப்பது போன்ற இராணுவ நடவடிக்கைகள் ரஷ்யாவைத் தூண்டு வதற்கு ஏதுவாக அமைந்தன. டான்பாஸ் பகுதி தொடர்பாக மின்ஸ்க் (Minsk) ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சரத்துகளை உக்ரைன் ஆட்சியாளர்கள் போதிய அளவிற்கு நடைமுறைப்படுத்தவில்லை.

கிழக்கு ஐரோப்பிய பகுதிகளில் நேட்டோவின் விரிவாக்கம் தொடரக் கூடாது என்று ரஷ்யா தொடர்ந்து வலியுறுத்தி வரும் வேளையில், அதன் எல்லைப் பகுதிகளில் உள்ள உக்ரைன் மற்றும் ஜார்ஜியா ஆகிய நாடுகளுடன் நேட்டோ இராணுவ ரீதியாக மேலும் இணக்கமாகச் செயல்படுவதுடன், அதன் விரிவாக்கத்தையும் தொடர்ந்து வருகிறது. இவை அனைத்தும் ரஷ்யாவில் அச்சவுணர்வை உருவாக்கியதோடு, உக்ரைன் மீதான இராணுவத் தாக்குதலுக்கும் வித்திட்டது.

**கடந்த காலங்களில், ஈராக் மற்றும் யூகோஸ்லாவியா மீது போர் தொடுக்கப்பட்ட போது ஏற்பட்ட மிக மோசமான பேரழிவுகளை நேட்டோ அமைப்பு சிறிதும் வெட்கமின்றி மேற் பார்வையிட்டு வந்தது. ரஷ்ய தாக்குதல் குறித்து கேள்வி எழுப்புவதற்கான அதிகாரமோ, தார்மீக அடிப்படையோ அவர்களுக்கு இல்லை. அதே சமயம், நேட்டோவின் தூண்டு தலுக்கான ரஷ்யாவின் பதிலடியும் சரிநிகர் சமமற்றது ஆகும். ரஷ்யாவின் இந்த முழு வீச்சிலான தாக்குதல் உக்ரைன் நாட்டின் இறையாண்மையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் சீர் குலைத்ததோடு சர்வதேச சட்டத்திற்கு முற்றிலும் புறம்பானது ஆகும்.**

சோவியத் ஒன்றியம் சிதைவுற்ற பின், முதலாளித்துவ தன் னலக் குழுக்கள் அரசைக் கட்டுப்படுத்தத் தொடங்கிவிட்டன; ரஷ்யா ஒரு எதேச்சதிகார நாடாகிப் போனது. பிராந்திய மட்டத்தில் தலைமையேற்க வேண்டும் என்ற ரஷ்ய அபிலா ஷைக்கான குறியீடுகள் சில தென்படுகின்றன. 'மாபெரும் ரஷ்யாவை' மீட்டுருவாக்கம் செய்திட வேண்டும் என்று புதின் விரும்புகிறார். இது போன்ற விருப்பங்கள் அந்தப் பிராந் தியத்தின் ஸ்திரத்தன்மையை மேலும் சீர்குலைக்கும். ஆனால், நேட்டோ போன்ற அமைப்பு ஒருபோதும் இதற்குத் தீர்வாகாது. நேட்டோவும், ரஷ்ய தன்னலக் குழுக்களும் அந்தப் பகுதியை மோசமான சூழலுக்குள் ஆழ்த்தின. அதன் விளைவாக எண் ணற்ற மக்களின் உயிர் மற்றும் சொத்துக்கள் சேதமடைந்து வருவதை நாள்தோறும் நாம் கேள்விப்படுகிறோம். இரு தரப் பிலும், உழைக்கும் மக்கள் மடிந்து கொண்டிருக்கும் துயரமான நேரத்தில், ஆயுத தொழில்துறை அதன் கருவூலத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது. எனவே, ரஷ்யா உக்ரைனில் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்; பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும். ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையேயான பேச்சுவார்த்தை ஸ்தூலமான எந்தவொரு பலனையும் அளிக்கவில்லை என்ற போதும் இந்தப் பிரச்சனைக்கு, வேற்று நாடுகளின் தலையீடுகள் இன்றி, பேச்சுவார்த்தை மூலமாக மட்டுமே தீர்வு காண இயலும் என்பதை அனைவரும் உணர வேண்டும். அந்தப் பிராந் தியத்தில் போர் முடிவுக்கு வர வேண்டும்; அமைதி நிலவ வேண்டும்.

இந்தியாவில் உள்ள நம்மைப் பொறுத்தவரையில், தாக்குதல் நடைபெற்று வரும் பகுதிகளில் இருந்து இந்திய குடிமக்களை, குறிப்பாக மாணவர்களைப் பாதுகாப்பாக மீட்பதுதான் நமது முதன்மையான நோக்கம் ஆகும். இந்திய அரசாங்கம் உரிய தருணத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது, அங்கு சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு மேலும் பல இன்னல்களை உண்டாகியுள்ளது. அரசாங்கத் தரப்பில் அளிக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களும் தெளிவற்றவைகளாக, முரண்பட்டவைகளாக இருந்தன. முன்னோக்கு தன்மையற்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக நவீன்சேகரப்பா எனும் இந்திய மாணவர் உக்ரைன் நாட்டின் கார்கிவ் நகரில் மரணமடைந்தார். பிரதமரோ, தேர்தல் நடைபெற்று வரும் உத்தர பிரதேச மாநிலத்தில் அரசியல் ஆதாயத்திற்காக ரஷ்யஉக்ரைன் மோதலைச், சிறிதும் வெட்க மின்றிப், பயன்படுத்திக் கொள்ள முயலுகிறார்.

ஈராக் போரின் போது, நமது தேசிய விமானப் போக்குவரத்து நிறுவனமான 'ஏர் இந்தியா' 1,70,000 க்கும் மேற்பட்ட நமது மக்களை வெற்றிகரமாக அங்கிருந்து மீட்டது. தற்போது அந்நிறுவனம் தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்ட நிலை யில், விமானப் போக்குவரத்து துறை நெருக்கடியான இந்தச் சூழலிலும் லாபமீட்டவே முயலுகிறது. கடந்த சில ஆண்டு களாகவே, மார்தட்டிக்கொள்வது பா.ஜ.க வின் வழக்கமான போதும், உலக அரங்கில் இந்தியா அதன் மதிப்பையும், சிறப்பு நிலையையும் மிகப் பெரிய அளவில் இழந்துள்ளது. அணி சேரா கோட்பாட்டின் அடிப்படையில் இதர நாடுகளுடன் நாம் கொண்டிருந்த அமைதியான நல்லுறவுகளை விலையாகக் கொடுத்து மோடி அரசாங்கம் அமெரிக்க நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளது.

எந்தவொரு விஷயமும் பா.ஜ.க மற்றும் பிரதமருக்கு தேர்தல் ஆதாயத்திற்கான விஷயமாக இருந்தாலும் கூட, நிகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் நெடுந்தொலைவில் இருப்ப தாகத் தென்பட்டாலும் கூட, பகைமையுணர்வு கொண்டிருக்கும் தரப்பினிடம் சமரச முயற்சியின் மூலமாக இந்தப் பிரச்சனைக்கு சுமூகத் தீர்வு காண இந்தியா முயல வேண்டும்.

போர் ஒருபோதும் தீர்வை அளிக்கப்போவதில்லை என்பதால் உடனடியாகப் போர் நிறுத்தப்பட வேண்டும். போர் முடிவுற வேண்டும்; அமைதி நிலவ வேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறோம். போர் நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை என்றால், அணு ஆயுதப் பிரயோகம் கொண்ட உலகப் போர் மூளுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

தமிழில் – **அருண் அசோகன்**

---

## திட்டத்திலிருந்து



# ஒன்றிய அரசு விலகவே இணையவழி கொள்முதல் திட்டம்!

வருகிறது. மேலும் வெளி மாவட்டங்களின் விவசாயிகள் என்ன பாவம் செய்தார்கள்.,. அவர்களுக்கும் சேர்த்து தானே அரசு நிர்ணய விலையை அறிவித்துள்ளது. 62 கிலோ நெல் மூட்டை ரூபாய் 800/900க்கு.. அங்குவாங்கி.. 1200 ரூபாய்க்கு இங்கு விற்று வியாபாரிகள் இலாபம் பார்க்கும் வாய்ப்பை கொடுப்பது அரசுதானே. ஒரு மூட்டைக்கு ரூபாய் 350 வரை அந்த விவசாயிகள் நஷ்டம் அடைவதற்கு அரசு தானே காரணம். இப்படி ஒவ்வொரு ஆண்டும் எண்ணற்ற விவசாயிகள் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பை சந்திக்கிறார்கள். நெல் விளையும் பிற மாவட்டங்களிலும் அரசு நேரடி கொள்முதல் நிலையங்களை திறந்தால் மட்டுமே வெளி மாவட்டங்களின் நெல் வரத்து நிற்கும். விவசாயிகளுக்கும் வாய்ப்பாக அமையும்.

இந்தியாவில் 1991ல் 1155 கிலோ, 2005ல் 1585 கிலோ, 2020ல் 1865 கிலோ நெல் உற்பத்தியாகும். சீனாவில் ஒரு ஏக்கருக்கு நெல் மகசூல் 3500–3800 கிலோ ஆகும். நெல் சாகுபடி முதன்மையாக உள்ளதால் மொத்த உற்பத்தியில் உலகின் நெல் உற்பத்தியில் முதலாவதாக உள்ள சீனாவை இந்தியா நெருங்கி வருகிறது. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் ஒரு ஏக்கருக்கு சராசரி 2200 கிலோ கிடைக்கிறது.


இந்த நிலையில் மத்திய அரசின் இந்திய உணவுக் கழகம்.. தமிழ்நாட்டின் நெல் உற்பத்திக்கு ஏற்ப உரிய விகிதத்தில் இங்கு நெல் கொள்முதல் செய்வதில்லை கடந்த ஆண்டு 2.9 சதம் தான் நெல் கொள்முதல் செய்துள்ளது. பஞ்சாப் அரியானா.. உ.பி. மாநிலங்களுக்குத் தான் கடந்த பல ஆண்டுகளாக கூடுதல் கொள் முதலுக்கான தொகையை கொடுத்து வருகிறது. தெலுங்கானாவில் இந்திய உணவு கழகம் அரசியல் பகை கொண்டு நெல்கொள்முதல் செய்வதே இல்லை என்பதால் ஒன்றிய அரசுக்கு எதிராக மாநில அரசு போராடி வருகிறது.

அரசு கொள்முதலில் விற்பனை செய்திட வாய்ப்பு மறுக்கப்பட் டவர்கள் தான் தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளனர். இந்நிலைகளால் தான் குறைந்த பட்ச ஆதார விலை உறுதிச் சட்டம் என்பது சட்ட வடிவில் வேண்டும் என இந்தியா முழுவதும் ஒரு வலுவான கோரிக் கையாக 13 மாத கால போராட்டத்தில் உள்ளது. இது உறுதி செய்யப்பட்டால் அறிவிக்கப்படும் வேளாண் விளைப்பொருட்கள் அனைத்தையும்அரசே கொள்முதல் செய்திடும் உத்தரவாதம் மட்டுமல்ல., அரசு நிர்ணய விலையும் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைத்து விடும் . உண்மையாகவே வேளாண் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் காக்கப்பட வேண்டும் என்றால்,.. ..அனைத்து உற்பத்திக்கான செலவுகள் + கடன்மற்றும் முதலீட்டு வட்டி கூடுதல் +50% சேர்த்தால் தான் (சி2+) வேளாண் ஆணையத்தின் பரிந்துரையாக இருக்கும். விவசாயிகளுக்கு உண்மையான பாதுகாப்பாகும். 2018, 19 ஆம் ஆண்டு. ஒன்றிய அரசு தன் தேர்தல்கால வாக்குறுதியின்படி. உற்பத்திக்கான செலவுடன் 50 சதம் சேர்த்து விலை நிர்ணயம் செய்து வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தி விட்டோம் என்ற அறிவிப்பை செய்தது. ஆனால் இது சி2+ சேர்த்து இல்லை என்பதை மூடி மறைத்தது.

அரசு கொள்முதல் மற்றும் விலை நிர்ணயம் என்ற ஓரளவு ஒன்றிய அரசின் பாதுகாப்புடன் உள்ள தற்போதைய நடைமுறையில் இருந்து காலப் போக்கில் விலகிச்செல்லவே கடந்த 2020ல் கொண்டுவந்த வேளாண் சட்டங்களாகும். பெரும் கம்பெனிகளிடம் விவசாயிகளை, தானாகவே காலப்போக்கில் செல்லவிட்டு ஒன்றிய அரசு கொள்முதலை விலகிக்கொள்ளவே எதிர்கால திட்டம். ஆனால் நாடு தழுவிய போராட்டம் இதை முடக்கியுள்ளது.

எனவே இந்த இலக்கை நோக்கித்தான் விவசாயிகளின் போராட்டம் கூர்முனை கொண்டு குத்தீட்டியாய் உள்ளது. உறுதி செய்யப்பட்ட ஆதார விலை (சி2+ ) மற்றும் வேளாண் விளை பொருட்கள் அனைத்தும் முழு கொள்முதல் என்ற சட்ட வடிவத்தை நிறைவேற்றியே தீர வேண்டிய கட்டாயத்தில் ஒன்றிய அரசை இந்திய விவசாயிகள் போராட்டம் தள்ளி உள்ளது. இனி இவர்கள் அல்ல,.. எவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் இதை செய்துத்தான் தீரவேண்டும். இந்தியா முழுவதும் நெல் சாகுபடியும் ..உற்பத்தியும் அதிகமாகி வருவதால் நெல் கொள்முதலை குறைத்தாலே போதும் என ஒன்றிய அரசுகொள் முதலை நீர்த்துப் போகச் செய்கிற கபட நாடகமே... இணையவழி கொள்முதல் திட்டம் ஆகும்.

தொடர்புக்கு: **9443865101**



**நான் எழுதிய அனைத்தையும் எப்படியாவது ஏங்கல்ஸ்க்கு காண்பித்து விடுவேன். அவர் அதைப் படித்து சரி என்ற பின்பே அச்சுக்கு அனுப்புவேன். ஏங்கல்ஸ் எனக்கு முழு உலகம்.**

**- மார்க்ஸ்**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# அறிக்கைகள்

## கோகுல்ராஜ் கொலை வழக்கில் யுவராஜ் உட்பட 10 பேர் குற்றவாளிகள்


### ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் வரவேற்பு

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் ஆர்.நல்லகண்ணு, பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

சேலம் பொறியியல் மாணவர் கோகுல்ராஜ் கொலை வழக்கில் யுவராஜ் உட்பட 10 பேர் குற்றவாளிகள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததை தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் வரவேற்கிறது. வழக்கில் தொடர்புடைய பலரும் பிறழ்சாட்சியாக மாறிவிட்ட சூழலில் சிறப்பு வழக்கறிஞர் ப.பா.மோகன் சாட்சிகளை மறுவிசாரணை செய்து, நீதியை போராடி பெற்றிருக்கிறார். இது பாராட்டுக்குரியது. இதேபோல் அவர் பல வழக்குகளில் சமூக நீதிக்காக போராடி வருவதும் சிறப்புக்குரியது. சாதிய வன்கொடுமைகளுக்கு எதிராக சிறப்பு வழக்கறிஞர் நியமனம் மற்றும் ஆணவ படுகொலைக்கு எதிரான சிறப்புச் சட்டம் இயற்றும் தருணம் இது என தமிழக அரசுக்கு வலியுறுத்துகிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

## மன்னை கோ.தமிழரசன் மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடியான தோழர் ஜி. தமிழரசன் (80) மார்ச் 08 அன்று அதிகாலையில் காலமானார் என்ற அதிர்ச்சியளிக்கும் துயரச் செய்தி கிடைத்தது.

தற்போதைய திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், மேல நெம்மேலி ஊராட்சி ஆலங்கோட்டை அருகில் உள்ள கீழ நெம்மேலியில் பிறந்த தோழர் ஜி.தமிழரசன் பள்ளிக் கல்வி முடித்தவர். இளம்பிள்ளை நோயால் பாதிக்கப்பட்டவர். இருப்பினும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் இயக்கங்களால் ஈர்க்கப்பட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயல்பட்டு வந்தவர். கட்சியின் ஒன்றுபட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர், பொருளாளர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை ஏற்று மிகச் சிறப்பாக செயல்பட்டவர்.

விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் மற்றும் மாவட்டச் செயலாளர் மற்றும் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் என பல நிலைகளில் மிகச் சிறப்பாக செயல்பட்டு தொழிலாளர்களின் நன்மதிப்பு பெற்றவர். இந்திய சோவியத் நட்புறவுக் கழகத்தின் தஞ்சை மாவட்ட செயலாளர் பொறுப்பில் பணியாற்றி அனைத்துத் தரப்பினரின் பாராட்டுக்களை பெற்றவர். சமூக சமத்துவம் காண சாதிய தீண்டாமை ஒழித்தல் அவசியம் என்று கருத்தில் உறுதியுடன் போராட்டத்தை முன்னெடுத்தவர். இறுதி வரை திருமணம் செய்து கொள்ளாமல் கட்சி வாழ்க்கையை மேற்கொண்டு வந்தவர். அவரது இழப்பு எளிதில் ஈடு செய்ய முடியாதது.

தோழர் ஜி.தமிழரசன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி ஆழ்ந்த அஞ்சலி தெரிவித்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

"பாசிச பாஜக ஒழிக" என முழக்கமிட்ட

## மாணவி சோபியா வழக்கில் காவல் துறையினருக்கு ரூ.2 லட்சம் அபராதம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

தூத்துக்குடியைச் சேர்ந்த கனடா ஆராய்ச்சி மாணவி லாய்ஸ் சோபியா தூத்துக்குடி விமானத்தில் வருகையின்போது பாசிச பாஜக ஒழிக என்று அன்றைய பாஜக தமிழக தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களைப் பார்த்து கோஷமிட்டதற்கு விமானத்தில் வந்த தமிழிசை சௌந்தரராஜன் கொடுத்த புகாரின் அடிப்படையில் லாய்ஸ் சோபியா கைது செய்யப்பட்டார். மாணவி கைது செய்யப்பட்டது சட்டவிரோதமானது என்று அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளரும், வழக்கறிஞருமான பெ.சந்தனசேகர் வாதாடினார். இருப்பினும் லாய்ஸ் சோபியா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார்.

பிணையில் விடுவிக்க கூடிய சட்டப்பிரிவுகளில் கைது செய்யப்பட்டாலும், உச்சநீதிமன்றம் சட்டவிரோத கைதுகள் என்று இதுகுறித்து நிலையான அறிவுறுத்தல் செய்திருந்தும், பிணையில் விட மறுத்தது அதிமுக அரசு. இதனையும் கண்டித்து மாநில மனித உரிமை ஆணையத்திடம் முறையீடு வழக்கு நடைபெற்றது.

மாணவி சோபியாவிற்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவரது தந்தை டாக்டர் ஏ.ஏ.சாமி அவர்கள் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பொன்ராம், தூத்துக்குடி நகர காவல் துணை கண்காணிப்பாளர் பிரகாஷ், ஆய்வாளர்கள் திருமலை, பாஸ்கர், அன்னத்தாய், உதவி ஆய்வாளர்கள் லதா, நம்பிராஜன் ஆகியோர் மீதும் மாநில மனித உரிமை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கின் விசாரணை முடிவடைந்த நிலையில் மார்ச் 2 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எதிர் மனுதாரர்கள் மாணவி சோபியாவிற்கு செய்த மனித உரிமை மீறல்களுக்காக ரூபாய் இரண்டு லட்சம் அபராதம் வசூலித்து மாணவி சோபியாவிற்கு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 1வது எதிர் மனுதாரர் திருமலை ரூ.50000 மும், மற்ற எதிர்மனுதாரர்கள் தலா ரூ.25,000 மும் மொத்தம் ரூ.200000 இழப்பீடு வழங்கிடவும், எதிர் மனுதாரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், இனி வரும் காலங்களில் இது போன்ற மனித உரிமை மீறல்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அதற்குரிய வழிகாட்டுதல்களையும் மாநில காவல்துறை தலைவர் வழங்க வேண்டும் எனவும் அழுத்தமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரரின் வழக்கறிஞர் பெ.சந்தனசேகர் சென்னையில் உள்ள மாநில மனித உரிமை ஆணையத்தில் நேரில் ஆஜராகி எழுத்துப்பூர்வமான வாதுரையை தாக்கல் செய்தும், பல்வேறு சட்ட போராட்டங்களை நீதிமன்றத்தில் நடத்தியும், வாதாடியும் தொடர்ந்து அர்ப்பணிப்போடு பணியாற்றியுள்ளார். இதற்காக தொடர்ந்து வழக்கில் ஆஜராகி வாதாடி வென்றெடுத்த மனித உரிமைப் போராளி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பெ.சந்தனசேகர் மேலும் வழக்கிற்கு பெரிதும் துணை நின்ற வழக்கறிஞர் சு.பா.ராமச்சந்திரன் ஆகியோருக்கு பாராட்டுக்கள் வாழ்த்துக்கள்.

## தும்பைப்பட்டி சிறுமியின் தாயாருக்கு அரசு இழப்பீடும், வேலையும் வழங்க வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

மதுரை மாவட்டம். தும்பைப் பட்டியில் வசித்து வரும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த திருமதி சபரி (40) தேனீர் கடை நடத்தி வரும் ஆதரவற்றவர். இவர் மனநிலை பாதிக்கப்பட்ட கணவரையும், இரு குழந்தைகளையும் பாதுகாத்து வருகிறார்.

இவரது மகள் 17 வயது சிறுமியை, கடந்த 14.02.2022 ஆம் தேதி நாகூர் அனிபா என்பவர் வீட்டில் இருந்து வெளியே அழைத்துச் சென்றுள்ளார்.

இருவரும் வீடு திரும்பாத நிலையில் சிறுமியின் தாயார் மேலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதன் மீது காவல்துறை நடவடிக்கை மேற்கொண்டது.

இதற்கிடையில் ஈரோட்டில் அனிபாவின் உறவினர் வீட்டில் இருந்த சிறுமிக்கு எலி மருந்து கொடுத்துள்ளனர் இதனால் உடல் நலம் கடுமையாக பாதிக்கப்பட்ட சிறுமியை அனிபாவின் தாயார், சபரியிடம் கொண்டு போய் சேர்த்துள்ளார்.

சிறுமியின் உடல் நலம் மேலும் மோசமடைந்த நிலையில் சிறுமியின் தாயார் அவரை மதுரை ராஜாஜி அரசு மருத்துவ மனையில் சேர்த்துள்ளார். சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிறுமி மரணமடைந்துள்ளார்.

சிறுமியின் சாவுக்கு காரணமானவர்கள் மீது போக்சோ சட்டப்பிரிவுகள் மற்றும் கொலைக் குற்றம் புரிதல் உள்ளிட்ட பல கடுமையான சட்டப் பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து, அனிபா, அவரது பெற்றோர்கள் உட்பட எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் தண்டனை பெற்று தரும் வகையில் வழக்கை நடத்த வேண்டும்.

பெற்ற மகளை இழந்து நிற்கும் சபரி வாழ்க்கை புயலில் சிக்கிய துரும்பாக படாத, பாடு படுகிறது.

அவரது மனநிலை பாதித்த கணவரையும், பத்தாம் வகுப்பு படிக்கும் மகனையும் பாதுகாப்பதற்கு அரசு ஆதரவு கரம் நீட்டி உதவ வேண்டும்.

பள்ளிக்கல்வி பெறும் மகன் சந்தோஷின் கல்விச் செலவு முழுமையும் அரசு ஏற்க வேண்டும். மகளை இழந்து நிற்கும் சபரிக்கு இழப்பீடு வழங்குவதுடன், அவரது கல்வித் தகுதிக்கு தக்கபடியான அரசு வேலை வழங்கி உதவ வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

கர்நாடகத்தில் நீட் தேர்வுக்கு எதிராக

## இளைஞர் பெருமன்றம் தொடர் இயக்கம்

நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்யக் கோரி தொடர் இயக்கங்கள் நடத்த அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கர்நாடகா மாநிலக் குழு முடிவெடுத்துள்ளது. இது குறித்து இளைஞர் பெருமன்ற கர்நாடக மாநிலத் தலைவர் ஹரிஷ் பாலா, மாநிலச் செயலாளர் சந்தோஷ் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் கூறியுள்ளதாவது:

97% மதிப்பெண்களை உயர்நிலைக் கல்வித் தேர்வில் எடுத்திருந்தும் கர்நாடக மாணவன் நவீன் சேகரப்பாவுக்கு நீட் தேர்வின் காரணமாக மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைவில்லை. அதனால் அவர் உக்ரைன் நாட்டில் மருத்துவம் படிக்கச் சென்று அங்கு நடக்கும் போரில் மடிந்தார். கடினமாக உழைத்து அதிக மதிப்பெண் எடுக்கும் மாணவர்களுக்கும் கூட கர்நாடக மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் இருப்பது பெருந்துயரம். நீட் தேர்வினை ரத்து செய்யக் கோரி அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கர்நாடக மாநிலக் குழு மாநிலம் தழுவிய தொடர் இயக்கங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளது. இதன் முதல் கட்டமாக மார்ச் 5 முதல் 28 வரை மாநிலம் தழுவிய கையெழுத்து இயக்கம் நடைபெறும். முதல் நாளான மார்ச் 5 அன்று எல்லா மாவட்டங்களிலும் ஆட்சியர் மூலமாக ஒன்றிய அரசுக்கு நீட் ரத்து செய்ய வேண்டி கோரிக்கை மனு அளிக்கப்படும். பெறப்படும் கையெழுத்துக்கள் தொகுக்கப்பட்டு ஜனாதிபதி, பிரதமர், ஆளுநர், முதலமைச்சர் மற்றும் மாநில உயர்கல்வி அமைச்சர் ஆகியோருக்கு அளிக்கப்படும். அடுத்த கட்ட போராட்ட வடிவம் குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும்.

கர்நாடகா மாநிலத்தில் நீட் தேர்வுக்கு எதிராக போராட்டங்களை நடத்தும் முதல் இயக்கம் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைப் பெரியாறு அணையை பாதுகாத்திட

## மார்ச் 24, 25 பிரச்சார இயக்கம்; 26ல் ஆர்ப்பாட்டம்

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தீர்மானம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைமையின் வழிகாட்டதலுக்கு இணங்க மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் நிர்வாகிகள் கூட்டு கூட்டம் மதுரை டியூகு கூட்ட அரங்கில் மார்ச் 05 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ. தலைமையேற்றார். கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் பி.காளிதாஸ், மதுரை கு.சந்தானம், வி.ஜெயக்கொடி, எஸ்.செல்லவேல், தேனி.காசிவிஸ்வநாதன், சிவகங்கை ஜி.காமராஜ், திண்டுக்கல் தொடர் சால.அரவிந்தன் மற்றும் பலர் பங்கு கொண்டனர்.

சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலாமணி முல்லைப்பெரியாறு சம்பந்தமான பாதுகாப்பு மற்றும் அதன் தொடர்பான பிரச்சனைகளை கூறிய பின் அந்தந்த மாவட்ட நிர்வாகிகளின் விவாதத்திற்கு பின் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

உச்சநீதிமன்றம் தனி தொழில்நுட்ப குழு அமைத்து அதன்மூலம் ஆய்வறிக்கை பெற்று முல்லை பெரியார் அணை பாதுகாப்பு பலத்துடன் உள்ளது என வெளியிட்டு 142 அடி தண்ணீரை தேக்கி வைத்து தமிழகம் பயன்படுத்திட ஆணையிட்டது. ஆனால் கேரள மாநில அரசு தொடர்ந்து முல்லைப் பெரியாறு அணையை இடித்திட உச்சநீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தொடுத்து இருப்பதும், கேரள மாநில கவர்னர் உரையில் இதை வலியுறுத்தி இருப்பதும் வேதனையாகும். இந்த நிலையில் பேபி அணை கட்டுமானங்களுக்கும் உரிய ஒத்துழைப்பு கொடுக்காது அடம் பிடித்து வருகிறது.


முல்லைப் பெரியாறு அணை மூலம் பாசனம் மற்றும் ஐந்து மாவட்டங்களின் குடிநீருக்கு ஆதாரமாக இருக்கிற இந்த அணையை பாதுகாத்திட பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற்றிடும் முறையில் வருகிற மார்ச் 24, 25 நாட்கள் இந்த மாவட்டங்களில் பொது மக்களை சந்தித்து ஆதரவு கோருகிற பிரச்சார இயக்கத்தையும், 26ம் தேதி அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு முன்னாள் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பங்கு பெறும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

இம் மாவட்டங்களின் விவசாயிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் பெருமளவில் பங்கு கொண்டு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



அ.அசரப் அலி



## கோகுல்ராஜ் ஆணவக்கொலை - நீதிமன்றத் தீர்ப்பு

# சாதி ஆணவ வெறி படுகொலைக்கு சவுக்கடி



**ஆண்மைக் காலங்களில் நாட்டின் உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புகளே கூட ஆள்வோரை அனுசரித்துப் போகும் வகையில் வெளியாகி, நீதிமன்றங்களின் மீதான நம்பிக்கையைக் குலைத்து வருவதை அறிவோம். இந்தப் பின்புலத்தில் திருச்செங்கோடு கோகுல்ராஜ் ஆணவக் கொலை வழக்கில், மதுரை வன்கொடுமை தடுப்பு சிறப்பு நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு, நீதித்துறைக்கு பெருமை தேடித் தந்துள்ளது.**

இந்தியாவில், சமூக நீதி, சாதி ஒழிப்பு, பாலின சமூகத்திற்காகப் போராடிய மண்ணில், சாதி ஆதிக்க வெறியால் தூண்டப்படும் ஆணவக் கொலைகள் தொடர்வது, சாதிய வேர்கள் ஆழமாகப் பாய்ந்துள்ளதை உணர்த்துகின்றது.

கோகுல்ராஜ் கொலையின் பின்னணியில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக வீரசமர் புரிந்த தீரன் சின்னமலை பெயரிலான ஒரு சாதிய அமைப்பு வெறித்தனமாக இந்தக் கொலையை நடத்தியுள்ளது. அப்பாவி இளைஞர்களிடம் சுய சாதிப் பெருமையை ஊட்டி வளர்த்து, இத்தகைய சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுத்தும் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

சேலம் மாவட்டம், ஓமலூரைச் சார்ந்த கோகுல்ராஜ் தலித் சமூகத்தைச் சார்ந்தவர். திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். பொறி யியல் கல்லூரியில், படித்து வந்த போது, சுவாதி என்ற உயர் சாதி சக மாணவியுடன் பழகி வந்துள்ளார். அவர்களிருவரும் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோவிலில் 2015 ஜூன் 23 இல் சந்தித்து பேசிக் கொண்டிருந்தபோது, தீரன் சின்னமலை பேரவையின் தலைவரான யுவராஜ் மற்றும் அவரது சகாக்கள், காதலர்களை பிரிக்கும் எண்ணத்துடன், கோகுல்ராஜை கடத்திச் சென்று, அவர் தானாக தற்கொலை செய்து கொள்வதாக வீடியோ எடுத்து, கடிதம் எழுதி வாங்கிய பிறகு பள்ளிபாளையம் அருகே தலையைத் துண்டித்துவிட்டு சடலத்தை ரயில் தண்டவாளம் அருகே வீசி எறிந்து தங்கள் சாதி வெறியைத் தீர்த்துக் கொண்டார்கள்.

இந்த வழக்கு, தற்கொலையாக முதலில் பதிவு செய்யப்பட்டது. பின்னர் உடல் கூராய்வில், கூரான ஆயுதத்தால் துண்டிக்கப்பட்டது என்ற தகவலையடுத்து கொலைக் குற்றமாக மாற்றப்பட்டு விஷ்ணுப்பிரியா என்ற துணை காவல் துறை கண்காணிப்பாளரால் விசாரிக்கப்பட்டது. அவர் யுவராஜின் கூட்டாளிகளைக் கைது செய்து, தலைமறைவாக இருந்த யுவராஜை சரணடைய வற்புறுத் தியபோது, பல்வேறு நிர்பந்தங்களுக்கு ஆளாக்கப்பட்டார். இதன் விளைவாக பிப்ரவரி 18ல் தற்கொலை செய்து கொண்டார்.

அசாதாரணமான சூழல் நிலவி வரும் நாமக்கல் மாவட்டத்தில் தனக்கு நீதி கிடைக்காது என்றுணர்ந்த, கோகுல்ராஜின் தாயார் சித்ரா, வழக்கை வேறு மாவட்டத்திற்கு மாற்றவும், சிறப்பு அரசு வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகனை நியமிக்கவும் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதன்படி வழக்கு மதுரைக்கு மாற்றப்பட்டது. இரண்டு நீதிபதிகள் இடையே மாற்றலாகினர். மூன்றாவதாக தற்போது தீர்ப்பு வழங்கியுள்ள நீதிபதி சம்பத் குமார் யுவராஜ் உள்ளிட்ட 10 பேரை குற்றவாளிகளாகவும், மீதி 5 பேரை விடுவித்தும் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

**106 சாட்சியங்கள், 500 ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. காதலனை இழந்த சுவாதியே போதிய பாதுகாப்பு கிடைக்காத சூழலில் பிறழ் சாட்சியாக மாறிவிட்டார்.**

**எனினும், உடற்கூறாய்வு அறிக்கை, சிசிடிவி காணொளிப் பதிவுகள், சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஆராய்ந்து, கோகுல்ராஜ் மரணம் திட்டமிட்ட படுகொலை ஆணவக்கொலையே என்று நீதிபதி தீர்ப்பளித்துள்ளது சாதி ஆதிக்கத்திற்கு எதிரான சவுக்கடியாக வரவேற்பை பெற்றுள்ளது.**

**இந்த வழக்கில் சிறப்பு அரசு வழக்கறிஞராக கடும் உழைப்பை தந்து வாதாடியுள்ள, மனித உரிமைப் போராளி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர் ப.பா. மோகன் மற்றும் அவரது வழக்கறிஞர் குழுவிற்கு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம்.**

தோழர் ப.பா.மோகன் தாழ்த்தப்பட்ட பிரிவு மக்களுக்காக நீதிமன்ற போராட்டத்தை நடத்தியது முதன் முறையல்ல. பல வழக்குகளில் தலித் மக்களுக்கு நீதி கிடைக்க போராடி வென்றுள்ளார்.

மதுரை மேலவளவு ஊராட்சித் தலைவர் முருகேசன் உள்ளிட்ட 6 பேர் ஆதிக்க சாதியினரால் வெட்டிக் கொல்லப்பட்ட வழக்கு, நாமக்கல் தலித் வழக்கறிஞர் தமயந்தி, கணவரால் வன்கொடுமை செய்யப்பட்டதற்கு நீதிமன்றம் தண்டித்த வழக்கு, செக்கனகரம்பட்டி யில் பொது ஏலத்தில் பங்கேற்ற இரண்டு தலித்துகள் வெட்டிக் கொல்லப்பட்ட வழக்கு என்று, பல்வேறு வழக்குகளில், தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை நீதிமன்றம் செவிமடுக்க வைத்து, நீதி கிடைப்பதில் மகத்தான பணியாற்றியுள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதில் சட்டவிதிகளைத் தாண்டி மனித நேயத்துடனும், கரிசனத்துடனும் நீதிபதிகள் தீர்ப்பளிக்க வேண்டுமென மறைந்த நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணய்யர் அறிவுறுத்தியுள்ளதை, தனது வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் நடைமுறைப்படுத்தியுள்ள நீதிபதி சம்பத்குமார் அவர்களுக்கு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பாக நன்றி கூறுகிறோம்.

சாதி ஆணவக் கொலைகளுக்கு எதிரான நமது தொடர்ந்த போராட்டங்களில், கோகுல்ராஜ் கொலை வழக்கில் கிடைத்துள்ள தீர்ப்பு, சட்ட ரீதியான போராட்டத்திற்கு முத்தாய்ப்பாய் கிடைத்துள்ள ஒரு வெற்றி. எனினும், மனித மனங்களில் காலங்காலமாக உறைந்து கிடக்கும் சாதியுணர்வை நீக்கும் கருத்தியல் போராட்டத்தில் நாம் செல்ல வேண்டிய தொலைவு நீண்டது. அதற்கான களப் போராட்டங்களில் நமது பணிகளை தொடர நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.

தொடர்புக்கு: **98423 06485**

# இந்திய மாணவர்கள் பாதுகாப்பாக திரும்ப உதவிடுக

## ரஷ்ய அதிகாரியுடன் இஸ்கப் நிர்வாகிகள் சந்திப்பு

உக்ரெய்னில் பயின்று வரும் இந்திய மாணவர்களைக் காப்பாற்றி தாய்நாட்டுக்கு அனுப்பும் பணியில் ரஷ்யா இந்திய அரசுக்கு உதவிடவேண்டும்; ஆதரவற்ற நிலையில் ரஷ்ய எல்லைப் பகுதியான சுமி மாகாணத்தில் தவித்துவரும் இந்திய மாணவர்களை யுத்தச் சூழலிலிருந்து காப்பாற்றி தாய்நாடு அனுப்ப அனைத்து முயற்சிகளையும் ரஷ்ய அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

அமெரிக்க நேட்டோ பின்புல அரசியல் தந்திரங்களால் உக்ரெய்ன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா, அப்பாவி உக்ரெய்னியப் பொதுமக்கள் நலனை முதன்மையாக்கொண்டு செயல்பட்டு, போரை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் போன்ற கோரிக்கைகளுடன் இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம் (இஸ்கப்) அமைப்பின் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன் வழிகாட்டுதலின்படி ரஷ்யத் தூதரக அதிகாரி கென்னடி ரொகலேவ் அவர்களை இஸ்கப் மாநிலத் துணைத் தலைவர்கள் வழக்கறிஞர் கே.தேசிங், ஆர். கிருஷ்ணமூர்த்தி, சென்னை மாவட்டச் செயலாளர் பி.செந்தில்குமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ராஜ் தாஸ், வழக்கறிஞர் வெங்கடேஷ் ஆகியோர் சந்தித்தனர்.

இந்திய மாணவர்களின் உயிர் காத்து, பாதுகாப்புடன் அவர்களை தாயகம் அனுப்பி வைக்கும் அனைத்து முயற்சிகளையும் ரஷ்யா முன்னெடுக்கும் என்று உறுதியளித்தார்.

இஸ்கப்பின் அகில இந்திய பொதுச்செயலாளர் பிஜய் குமார் படிஹரி புது டில்லியிலுள்ள ரஷ்யத் தூதரை சந்தித்துப் பேசினார்.



## அரசு அறிவித்தபடி மேம்பாலம் அமைக்க

# நாடாளுமன்ற உறுப்பினர் உறுதி

ஞாயிறு கிராமத்தில் மேம்பாலம் அமைக்க கோரி திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே ஜெயக்குமார் அவர்களை மாவட்ட கவுன்சிலர் தேவி தயாளன் அவர்களின் தலைமையில், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன், ஞாயிறு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கே. ஜனார்த்தனன், ஞாயிறு திமுக செயலாளர் ஆர். வேணுகோபால், மபுஸ்கான் பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் வீ.சண்முகம், அருமந்தை ஊராட்சி மன்ற தலைவர் சி. விக்ரமன், திருநிலை ஊராட்சி மன்ற தலைவர் அம்மு சிவகுமார், ஞாயிறு ஊராட்சி மன்ற உறுப்பினர் கே.சதீஷ், ஞாயிறு கே.வெங்கடேசன், கண்ணியம்பாளையம் முனுசாமி ஆகியோர் உடன் இருந்தனர். அரசு அதிகாரிகளுடன் கலந்துபேசி அரசு அறிவித்தபடி ஞாயிறு – வன்னி பக்கம் இடையே மேம்பாலம் அமைக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் உறுதி அளித்தார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 62. உன்னத நோக்கம்

**உன்னத நோக்கத்திற் குண்டுயர்வு இல்லையாம்**
**அஃகி அகன்றஅறி வுக்கு.**

உயர்ந்த குறிக்கோளுடன் கூடிய அறிவுக்கு என்றும் உயர்வுதேடிவரும் பரந்து விரிந்த அறிவானாலும், உயர்ந்த குறிக்கோள் இல்லையேல் தேய்ந்து வீணாகும்.

**சொல்கடந்து சொல்பொருள் தான்கடந்து சொல்லுவான்**
**நெஞ்சடைந்து நேர்ந்து கொளல்.**

ஒருவன் சொல்லைக் கொண்டோ சொற் பொருளைக் கொண்டோ அவனைப் பற்றி முடிவு செய் யாமல் அவனது நோக்கத்தைப் புரிந்து கொண்டு மதிப்பிட வேண்டும்.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

தமிழகம் முழுவதும் தா.பா.முதலாமாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி பரவலாக நடைபெற்றுள்ளது பாராட்டிற்குரியது. ஜனசக்தியில் தா.பா.குறித்த விரிவான கட்டுரை வெளிவந்திருந்தால் கூடுதல் சிறப்பாக இருந்திருக்கும்.

**– மாயாண்டி,**
ஆண்டிப்பட்டி

**ஆசிரியர் ஜனசக்தி,**

மாமன்ற, நகர்மன்ற, பேரூராட்சி உறுப்பினர்கள் மற்றும் மேயர், துணை மேயர், நகர்மன்றத் தலைவர், துணைத் தலைவர், பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் அனைவரும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் போன்று சிந்தித்து செயல்பட முன்வாருங்கள் என்று இரா.முத்தரசன் அழைத்திருப்பது சாலப் பொருத்தம்.

**– கே.பெருமாள்,**
சைதாப்பேட்டை, சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஹிஜாப் தேவையா? பெண்களே முடிவு செய்யட்டும் என்ற மஞ்சுளாவின் கட்டுரை மத வெறி கொண்டு மக்களை பிளவுபடுத்தும் ஆர்எஸ்எஸ் மற்றும் சங் பரிவார் கும்பலுக்கு நல்ல சாட்டையடி.

தெங்கு மரஹாடவை உயிரோடு புதைக்க குழி வெட்டும் புலிகல் காப்பகம். பி.எல்.சுந்தரம் கட்டுரை அருமை.

**– பி.ஆர்.தேவராஜன்,**
சத்தியமங்கலம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

உக்ரைனில் சிக்கியுள்ள மாணவர்களை விரைந்து மீட்டெடுக்க வேண்டும் என்ற டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் எழுதிய கட்டுரை உக்ரைனில் மருத்துவம் பயிலும் மாணவர்கள் அதிகம் என்பதையும் அவர்களை மிகப் பெரிய பாதிப்பிலிருந்து உடனடியாக மீட்க வேண்டும் என்பது பற்றியும் விவரிக்கிறது.

**– க.சந்திரன்,** சீர்காழி

## திருமண வரவேற்பு விழாவில்
# ஜனசக்தி
## வளர்ச்சி நிதி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர். நிர்மலா மருதக்குட்டி அவர்களின் சகோதரர் சி.ஆர். பொன்னுசாமி – பி.மனோன்மணி ஆகியோரது மகன் பொ.வசந்த் – ஏ.தீபிகா திருமண வரவேற்பு 06.03.2022 ம் தேதி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் எம்.எல்.ஏ., அவர்களிடம் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.5000 வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் சி.சிவசாமி, மேற்கு மண்டலச் செயலாளர் ஜெ.ஜேம்ஸ், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சி.தங்கவேல், 41வது மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், மேற்கு மண்டல துணைச் செயலாளர் சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க கிளை பேரவை

தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கம் அல்லித்துறை கிளை பேரவை கூட்டம் மணிகண்டம் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு மாநில குழு உறுப்பினர் எம்.ஆர்.முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பேரவையில் தலைவராக எஸ். முத்துலெட்சுமி, செயலாளராக எம். ரஷியாபேகம், பொருளாளராக பி. பல்கீஸ்பானு, துணைத் தலைவராக எம். சரோஜா, துணைச் செயலாளராக ஏ.விமலா ஆகியோர் ஒருமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாகிகளை வாழ்த்தி ஒன்றிய பொருளாளர் எஸ்.முத்தழகு உரையாற்றினார்.

தாயனூர் கொய்யாத்தோப்பு ஆகிய பகுதிகளிலிருந்து அல்லித்துறை வழியாக சத்திரம் பேருந்து நிலையம் மத்திய பேருந்து நிலையத்திற்கு பள்ளி நேரங்களில் காலை மாலை கூடுதல் பேருந்து இயக்க கோரியும் சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து அல்லித்துறை சரவனாபுரம் வரை தனி பேருந்து வசதி ஏற்படுத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



## வளைபந்து விளையாட்டு போட்டிகளை பி.லிங்கம் எக்ஸ் எம்பி தொடங்கி வைத்தார்

விருதுநகர் மாவட்டம் சிவகாசி மீனம்பட்டியில் , பாண்டியன் வளைப்பந்து விளையாட்டு கழகம் சார்பில் வளைப்பந்து போட்டிகள் நடைபெற்றன. ஆசிரியர்கள் வன்னியப்பெருமாள், லெனின் ஆனந்த் தலைமை வகித்தார்கள். சதீஷ்பிரபு முன்னிலை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ். பழனிக்குமார் , மாவட்ட பொருலாளர் க.சமுத்திரம் ஆகியோர் வளைப்பந்தை போட்டு விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்தனர். வட்ட துணை செயலாளர் ஆர்.கலைவாசகன், இளைஞர்மன்ற டிமிட்ரோ உள்பட ஏராளமானோர் உடனிருந்தனர்.

## சிட்லப்பாக்கம் பகுதி மக்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை

சிட்லபாக்கம் பகுதியை சுற்றியுள்ள பெரியார் தெரு, ஆனந்த நகர், ராமகிருஷ்ண புரம் குடியிருப்பில் 403 குடும்பத்தின் மேல் உள்ள மக்களின் குடியிருப்புகளில் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு வசித்து வருகிறார். இம்மக்களின் குடியிருப்பை அகற்றும் நடவடிக்கையை கைவிட்டு பட்டா வழங்க வேண்டுமென பகுதியை ஆய்வு செய்து கடந்த ஒரு ஆண்டுகளாக தமிழக முதல்வர் அவர்களுக்கு கடிதத்தின் மூலமாகவும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை தொடர்பு கொண்டு வலியுறுத்தி வருகிறார். தோழர் ஆர்என்கே அவர்களின் கோரிக்கையை ஏற்று மக்களின் குடியிருப்பை பாதுகாத்து விரைவில் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகளில் தமிழக அரசு தற்போது மேற்கொண்டு வருகிறது.

## அனைத்து தொழிற்சங்க திருச்சி மண்டல ஆயத்த மாநாடு

ஒன்றிய மோடி அரசின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, தேச விரோத கொள்கைகளை கண்டித்து மார்ச் 28 29 அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் நாடு தழுவிய பொது வேலைநிறுத்தம் நடைபெறுவதையொட்டி மார்ச் 5ல் திருச்சியில் நடைபெற்றது. மண்டல ஆயத்த மாநாட்டில் ஏஐடியூசி மாநில பொதுச்செயலாளர் டி.எம். மூர்த்தி சிறப்புரையாற்றினார். அரியலூர் மாவட்ட ஏஐடியூசி சார்பாக பொதுச்செயலாளர் த. தண்டபாணி, ஜெயங்கொண்டம் நகராட்சி மா. தம்பிசிவம், பு. லெட்சுமி, எஸ். சீதா, ராணி, எஸ். மணிகண்டன், கே.மணிகண்டன், அரியலூர் நகர தெருவியாபார தொழிலாளர் சங்கம் எஸ்.முரளிகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# இரா.நல்லகண்ணுவிடம் பெண்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்

மார்ச் 8 சர்வதேச மகளிர் தினத்தன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு அவர்களை தாம்பரம் தொகுதி சிட்லபாக்கம் பெரியார் தெரு, ஆனந்த நகர் பகுதியை சார்ந்த பெண்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது தோழர் இரா. நல்லகண்ணு அவர்கள் பெண் உரிமைகள் கூறித்தும் பேசியும் பாரதியார் கவிதைகள் எடுத்துரைத்தும் சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

தங்கள் குடியிருப்பு உரிமைக்காக தொடர்ந்து போராடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்களுக்கும், கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.மகேந்திரன் அவர்களுக்கும் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர் எஸ்.கே.சிவா அவர்களுக்கும் பெண்கள் அனைவரும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

**விருதுநகர்:** விருதுநகரில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு , இந்திய தேசிய மாதர் சம்மேளனம் சார்பில் கொடியேற்று விழா, இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது. சிபிஐ மாவட்ட அலுவலகம் முன்பு நடைபெற்ற கொடிஏற்று விழாவிற்கு மாவட்ட தலைவர் பி.மாரீஸ்வரி தலைமை வகித்தார். மாவட்ட பொருலாளர் முத்து லட்சுமி முன்னிலை வகித்தார். சங்க கொடியை மாநில துணைத்தலைவர் பி.இராஜலட்சுமி ஏற்றி வைத்தார். இருசக்கர வாகன பேரணியை தி.க. மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ந.பொன் மேனிராஜயோகம் தொடங்கி வைத்தார். முக்கிய வீதிகள் வழியாக சென்ற பேரணி அல்லம்பட்டி பாரதியார் சிலை முன்பு முடிவடைந்தது.

மாவட்ட செயலாளர் எ.பாண்டிச்செல்வி பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்தார். பெண்கள் தினத்தின் சிறப்பு பற்றி சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம் எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் பேசினார்கள். சிவசக்தி நன்றி கூறினார்.

நல்லம்பள்ளி வட்டம், பி.அக்ராகரத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவிற்கு மாவட்ட தலைவர் பி.முனியம்மாள் தலைமை வகித்தார்.ம ாவட்டச் செயலாளர் கே.விஜயா வரவேற்பு உரையாற்றினார்.நிர்வாகிகள் நாகராணி, பெருமா, ஜோதி, விஜயலட்சமி, சாந்தி, மலர்வேணி, கவிதா, மகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரசு பணியாளர் சங்க மாநில செயலாளர் பி.திலகமணி விழாவை துவக்கி வைத்து பேசினார்.ஊராட்சி மன்ற தலைவர் அலமேலு,இந்திய தேசிய மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் எஸ்.கமலாமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார். விழாவில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன்,மாவட்ட பொது செயலாளர் கே.மணி,மாவட்ட துணை தலைவர் ஆர்.சுதர்சனன், மாவட்ட துணை செயலாளர் ஆர்.நடராஜன், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற முன்னாள் தலைவர் இரவீந்திரபாரதி ஆகியோர் வாழ்த்தி பேசினர். இந்நிகழ்ச்சியில் அரசு பணியாளர் சங்க மாவட்டச் செயலாளர் ஜி.ரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மயிலாடுதுறை:** உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் கட்டுமான தொழிலாளர்களின் மயிலாடுதுறை மாவட்ட சிறப்பு மாநாடு தேவகி மாநில குழு உறுப்பினர் இந்திராகாந்தி தலைமையில் எஸ்.வித்யாதேவி சுரேஷ் பேரூராட்சி உறுப்பினர் முன்னிலையில் நடைபெற்றது.

சிபிஐ மாவட்ட செயலாளர் சீனிவாசன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ராமன், சிபிஐ சீர்காழி ஒன்றிய செயலாளர் செல்லப்பன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். எம். பரமேஸ்வரி நன்றி கூறினார்.

**திண்டுக்கல்:** மகளிர் தினத்தன்று பெண் கட்டுமானத் தொழிலாளர்கள் சிறப்பு கருத்தரங்கு திண்டுக்கல்லில் நடைபெற்றது. பி.செல்வராணி தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் சீதாலட்சுமி, ஒருங்கிணைப்பாளர் கிளாரா, பி.செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர். சிபிஐ மாவட்டச் செயலாளர் ஏ.பி. மணிகண்டன், சங்க கௌரவத் தலைவர் துரை மோகன் மற்றும் பாலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**தஞ்சை:** ஏஐடியூசி கட்டுமான தொழிலாளர் சங்க




**கோவை:** தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் பெண் கட்டுமான தொழிலாளர்களின் சிறப்பு மாநாடு, மகளிர் தினத்தன்று மாவட்டத் தலைவர் ஜே.கலா தலைமையில் நடைபெற்றது. அமைப்பின் செயலாளர் சி. நந்தினி. துவக்கி வைத்தார். பொருளாளர் ராணி, மாநில குழு உறுப்பினர் சத்யாசெந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநாட்டில் கோவை மாமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட திருமதி மல்லிகா புருஷோத்தமன், பிரபா ரவீந்திரன், சாந்தி சந்திரன், மோகன் மற்றும் பொள்ளாச்சி நகர்மன்ற உறுப்பினர் உமாமகேஸ்வரி ஆகியோருக்கு சிறப்பு செய்யப்பட்டது. கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகி ஐஸ்வர்யா தேவி, எம்.வி.ராஜன், வழக்கறிஞர் ஏ.சுப்பிரமணியன், சங்கத்தின் மாநில துணை பொதுச்செயலாளர் என்.செல்வராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர்கள் ஆர். பாலகிருஷ்ணன், என். சோமசுந்தரம், செயலாளர்கள் கோட்டை ஆர். நாராயணன் ஆகியோர் வாழ்த்தினர்.

### பணியிடங்களில் பாதுகாப்பு வழங்க ஏஐடியூசி பெண்கள் கட்டட சங்கம் தீர்மானம்

**தருமபுரி:** தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்ட பெண்கள் கட்டட தொழிலாளர்கள் சங்கம் சார்பில் உலக மகளிர் தின விழா நடைபெற்றது. தருமபுரி மாவட்டம், சார்பில் தஞ்சாவூர் ஏஐடியூசி அலுவலக கூட்டரங்கில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் சே.எலிசபெத், எம். ஜமுனாராணி, வி.லலிதா ஆகியோர் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. க.திலகவதி தமிழ் தாய் வாழ்த்து பாட பெண்களுக்கான உரிமை பாடலை லீதியான் பாடினார். கருத்தரங்கில் வழக்கறிஞர் ச.இமயா, வாழ்க வளமுடன் செம்மலர் செல்வி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் தஞ்சாவூர் சுதா, மகேஸ்வரி, ஆர். சிவகாமி, டி.யமுனா, ஆர்.ராணி, பாப்பாநாடு கண்ணகி, வல்லம் செந்தமிழ்ச்செல்வி, ரேணுகா, சட்டக்கல்லூரி மாணவி ச.இமயா மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**மதுரை:** சர்வதேச மகளிர் தினத்தில் மதுரை அழகர்கோவிலில் மாவட்ட அளவிலான கட்டட கட்டுமான பெண்களுக்கான பேரவை கூட்டம் நடைபெற்றது.

இந்த பேரவை கூட்டத்தை தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர்கள் சங்க பொருளாளரும், மாவட்ட செயலாளருமான இரா.முருகன், கட்டட சங்கத்தின் மாவட்ட தலைவர் ம.இருளாண்டி வழிநடத்தினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளரும், ஏஐடியூசி மாவட்ட தலைவருமான எம்.எஸ்.முருகன் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார்.




## கோயமுத்தூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்பு

கோயம்புத்தூர் மாநகராட்சியில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நான்கு மாமன்ற உறுப்பினர்கள் பதவியேற்றுக்கொண்டனர்.

41வது வார்டு சாந்தி சந்திரன், 43 வது வார்டு மல்லிகா புருஷோத்தமன், 48 வது வார்டு பிரபா ரவிந்தரன், 53 வது வார்டு எம். டி. மோகன் ஆகியோர் கோயமுத்தூர் மாநகராட்சி வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹாலில், நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் மாமன்ற உறுப்பினராக பதவியேற்று கொண்டனர்.

பதவி ஏற்றுக்கொண்ட தோழர்கள் நால்வருக்கும் மற்றும் கூட்டணி கட்சி தோழர்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.






### பவானி நகராட்சியில் பதவியேற்பு

ஈரோடு மாவட்டம் பவானி நகராட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டு 11வது வார்டில் சி.மணி மற்றும் 20வது வார்டில் ஜி.கல்பனா ஆகியோர் பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில், திமுக நகர செயலாளர் ப.சீ.நாகராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகர செயலாளர் ப.மா.பாலமுருகன், மாவட்டக்குழு உறுப்பினர் கே.சந்திரசேகர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.கந்தசாமி, இளைஞர் பெரு மன்ற மாவட்ட செயலாளர் எம்.ஆர்.சுரேஷ்குமார், நகர தலைவர் பி.முகமது அலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மணப்பாறை நகராட்சியில் பதவிஏற்பு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கவுன்சிலர்கள் தங்கமணி மனோன்மணி இருவரும் மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் பதவி ஏற்றனர். இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித், துணைச் செயலாளர் பழனிச்சாமி, நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஏ.ஐ.டி.யூ.சி. சுப்ரமணியன், நல்லுச்சாமி விவசாய தொழிலாளர் சங்கம் பெருமாள் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்







### ஆண்டிபட்டி பேரூராட்சியில் பதவி ஏற்பு

ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 10 வது வார்டில் வெற்றி பெற்ற மீனாட்சி முனீஸ்வரன் பதவியேற்று கொண்டார்.

பதவியேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, மாவட்டக்குழு உறுப்பினர் ஜனசக்தி பிரபாகரன் கலந்து கொண்டனர்.

### உள்ளாட்சி பதவிகளில் வெற்றி

திருப்பூர் மாநகராட்சி துணை மேயராக ஆர்.பால சுப்பிரமணியம் அவர்களும்,

பவானி நகர மன்ற துணை தலைவராக சி.மணி அவர்களும்,

திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி நகராட்சி துணைத் தலைவராக பி.ராஜேஸ் வரி அவர்களும்,

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி பேரூராட்சி துணைத் தலைவராக ஏ.பி. சரவணன் அவர்களும் தேர்வு செய்யப்பட்டனர்.

வத்திராயிருப்பு பேரூராட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்

## பி.தவமணி தலைவராக வெற்றி



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு பேரூராட்சியில் திமுக கூட்டணியில் தலைவர் பதவிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் பி.தவமணி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். திமுகவைச் சேர்ந்த பஞ்சு துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.தவமணி அவர்களுக்கு மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், நகர செயலாளர் கோவிந்தன், இளைஞர்மன்ற லி.பகத்சிங், தவிதொச வரதராஜன் மற்றும் திமுக ஒன்றிய செயலாளர் முனியாண்டி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

கள்ளக்குறிச்சி அரசு கலைக்கல்லூரியில்

## பேராசிரியர்கள் இல்லை!

### மாணவர்களின் எதிர்காலம்?

கள்ளக்குறிச்சி அரசு கலைக்கல்லூரியில் பயிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு போதிய பேராசிரியர்களை நியமிக்காததால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்புற ஏழை எளிய மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்கு சென்று கல்லூரியில் பயில்வதை போக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கள்ளக்குறிச்சியில் உருவாக்க வேண்டும் என அரசிடம் நீண்டகாலமாக கோரிக்கை வைத்து வந்தனர்.

கல்வியில் பின்தங்கிய அப்போதைய விழுப்புரம் மாவட்டத்தின் கடைக்கோடியில் உள்ள கல்வராயன் மலை மற்றும் அடிவார கிராமப்புற மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைய கள்ளக்குறிச்சியில் அரசு கல்லூரி அமைக்க வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போராடி வந்தனர். இதனை ஏற்ற தமிழக அரசு கடந்த 2012ம் ஆண்டு கள்ளக்குறிச்சியில் அரசு கலைக் கல்லூரி தோற்றுவிக்க அரசாணை பிறப்பித்தது.

தொடக்கத்தில் அரசு தொடக்கப்பள்ளியில் கல்லூரி தொடங்கப்பட்டு நெருக்கடியான நிலையில் செயல்பட்டது. பின்னர் கள்ளக்குறிச்சி அடுத்த சிறுவங்கூர் கிராம எல்லையில் கலைக் கல்லூரி கட்டிடம் கட்டித் தந்து செயல்படத் தொடங்கிய நிலையில் அந்தக் கட்டிடத்தை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பாட்டிற்கு எடுத்துக் கொண்டதால், கலைக் கல்லூரிக்கு இடம், கட்டிட வசதி இல்லாமல் தாயை இழந்த பிள்ளைபோல் கல்லூரி தற்போது கனியாமூரில் தனியார் கல்வி நிறுவனத்தில இயங்கி வருகிறது. இந்த கல்லூரியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் சேர்க்கை பெற்று உள்ளனர்.

இங்கு 16 நிரந்தர பேராசிரியர்களும், 20 கவுரவ விரிவுரையாளர்கள், 24 மணி நேர விரிவுரையாளர்களும் பணியாற்றி வந்தனர். கொரோனா பரவல் காரணத்தைக் காட்டி கல்லூரி மூடப்பட்டது. பின்னர் தொற்று குறைந்து அரசின் வழிகாட்டி நெறி முறையின்படி கல்லூரி திறக்கப்பட்டு வகுப்புகள் நடக்கிறது. 100% மாணவர்கள் கல்வி பயில வருகை தருகின்றனர். ஆனால் கல்லூரியில் பயிற்றுவிக்க போதிய பேராசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வி தடைப்பட்டு கேள்விக்குறியாக உள்ளது.

மேலும் குறைந்த ஊதியத்தில் நியமிக்கப்பட்ட மணிநர விரிவுரையாளர்களை கூட கல்லூரி நிர்வாகம் பணிக்கு எடுத்துக் கொள்ளாததால் இளம் தலைமுறையினர் வாழ்வாதாரம் இழந்து வேலை இன்றி தவிக்கின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்ட பேராசிரியர்கள் கல்லூரி இயக்குனரகம், உயர் கல்வித் துறை அமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர் வரை மனுக்கள் கொடுத்து போராடி வருகின்றனர். இருப்பினும் அரசு செவி சாய்க்காததால் கௌரவ விரிவுரையாளர்கள் பரிதாப நிலை ஒருபக்கம் இன்னொரு பக்கம் பேராசிரியர்கள் இல்லாததால் கல்லூரியில் பயிலும் ஏழை எளிய மாணவ மாணவர்களின் கல்வி முற்றிலும் தடைப்பட்டுள்ளது.

எனவே இனியாவது கள்ளக்குறிச்சி அரசு கலைக்கல்லூரி மாணவர்களின் கல்வி நலனை பாதுகாக்க போதிய விரிவுரையாளர்களை நியமிக்க வேண்டும் என பொதுமக்களும் பெற்றோர்களும் எதிர்பார்க்கின்றனர்.

– **கு.கபில்தேவ்** தொடர்புக்கு: **98942 74211**

அம்பேத்கர் நகர் கிளையில்

## அரசியல் வகுப்பு


அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், அம்பேத்கர் நகர் கிளை அரசியல் வகுப்பு நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிளை தலைவர் வி.பாலாஜி தலைமை தாங்கினார், சிபிஐ மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன், வி.தொ.ச மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப்சந்திரன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பி.வி.செந்தில், வி. தொ.ச. மாவட்ட துணை தலைவர் கே.போஸ், வி.தொ.ச. ஒன்றிய செயலாளர் கே.குமரேசன் மற்றும் இளைஞர் பெருமன்ற மாவட்ட குழு உறுப்பினர் வி.இ.ராஜீவ்காந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இக்கூட்டத்தில் ஜனசக்தி இளசை கணேசன் கலந்து கொண்டு அரசியல் வகுப்பு எடுத்தார்.



## தமிழ்நாட்டில் நிலமும் சாதியும்

இந்தியா ஒரு விவசாய நாடு என்பதால். இங்கு பெரும்பான்மையோர் விவசாயத்தை நம்பி இருக்கிறார்கள். விவசாயத்திற்கு தேவையான நிலம் என்பது ஒரு சிலரிடம் குவிந்து இருந்தது. அபரிமிதமான நிலம் வைத்திருந்தோர் உயர் சாதியாகவும், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் கீழ், இடை சாதிகளாகப் பார்க்கப்பட்டனர்.

இந்த ஏற்றத்தாழ்வுகளை போக்கும் நோக்கத்துடன் சட்டங்கள் இயற்றப் பட்டாலும் நில உச்சவரம்பு சட்டத்தில் விவசாய கூலி வேலை செய்கிற தாழ்த்தப்பட்டோர் முழுமையாக பயன் பெற வில்லை. இவர்கள் குத்தகை சாகுபடி சட்டத்தாலும் பயன் பெற முடியவில்லை. இதற்கு காரணம் நில சீர்திருத்த சட்டம் விவாதிக்கப்பட்ட போது பெரும் பண்ணையாளர்கள் தங்கள் நிலத்தை. பல பினாமிகள் பெயரில் மாற்றி எழுதி விட்டனர் என்று தமிழக அரசே குறிப்பிட்டது.



பிராமணரல்லாதோரின் நிலவுடமை அதிகரித் துள்ளது. அதாவது, பிராமணர் அல்லாதவர்கள் மிக அதிக அளவில் குத்தகை சாகுபடியாளர்களாக இருந்ததால், நிலசீர்திருத்த சட்டத்தினால் நிலங் கள் பிராமணரல்லாத வகுப்பு மக்களுக்கு சென் றுள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் பெருமளவில் விவ சாயக் கூலி தொழிலாளர்களாக இருந்ததால் அவர் களால் அதிக அளவில் குத்தகை சாகுபடி சட்டத்தினால் பயன் பெற முடியவில்லை. தாழ்த்தப் பட்டோர் சாகுபடி செய்கிற நிலத்தின் அளவு மிகவும் குறைவான அளவிலேயே அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 19 சதவீதம் ஆகும். ஆனால், அவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு 2000 – 2001 ஆம் ஆண்டு விவசாய கணக்கெடுப்பின்படி மொத்த சாகுபடி செய்யும் நிலத்தில் 7.2 சதவீதமாகும். கிட்டத்தட்ட இதே நிலையில் தான் அகில இந்திய அளவிலும் நிலவுடைமை உள்ளது என்பதை நாம் அறிய முடியும்.

கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் சாகுபடி மிகக் குறைந்த அளவு இருக்கிறது. தமிழ் சமூகம் கெட்டிபடுத்தப்பட்ட ஒரு சாதி சமூகமாக இருக்கிறது இதற்கு அடிப்படையாக நிலம் விளங்குகிறது.

பூமிதான இயக்கத்தால் நிலத்தை தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்த பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டாலும், பல இடங்களில் பட்டா மட்டும் பயனாளிகளிடம் இருக்கிறது. நிலம் பயனாளிகளிடம் ஒப்படைக்க முடியவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது. இதே நிலைதான் பஞ்சமி நிலத்திற்கும் ஏற்பட்டுள்ளது. 2.5 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலத்தை தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் சாதியும் நிலமும் நீக்கமற பிணைந்து கிடப்பதை காண முடிகிறது. தமிழ்நாட்டில் நிலமும் சாதியும் என்கிற இந்நூலில் எம் தங்கராஜ் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நூலினை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

**-இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : எம். தங்கராஜ்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை–14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 72 விலை : ரூ.60**

## நூல் நயம்

## நீரின்றி அமையாது நிலவளம் கட்டுரைகள்

நீரின்றி அமையாது உலகு என்றார் அய்யன் திருவள்ளுவர். நீர் தான் உலகத்தின் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருக்கிறது. செயற்கையாக உருவாக்க முடியாத ஒரு பொருள் நீர். இதனால்தான் நீரின்றி அமையாது நிலவளம் என்கிற கட்டுரை நூலினை முனைவர் பழ. கோமதிநாயகம் எழுதியுள்ளார். உலகத்தின் பெரும்பகுதி நீரால் சூழப்பட்டு இருந்தாலும். நாம் பயன்படுத்துகிற அல்லது நாம் பயன்படுத்த முடிகிற நல்ல நீர் மிகவும் சொற்பமானது. அந்த குறைவான நீரை தான் நாம் குடிப்பதற்கும், தொழிற்சாலைகளுக்கும், விவசாயத்திற்கும் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதில் விவசாயத்தில் மிக முக்கிய அடிப்படையான மூலப்பொருளே நீர்தான்.

இதை நமது முன்னோர் எவ்வாறு முறைப்படுத்தி பயன்படுத்தினார்கள் என்பதை இந்நூல் பேசுகிறது. பருவமழையை நம்பி இருக்கும் நமது நாடு. அந்த பருவமழை காலங்களில் பொழியப்படும் மழை நீரை முறையாக சேமிப்பதற்கு 39 ஆயிரம் ஏரிகளை தமிழ்நாட்டில் உருவாக்கி வைத்துள்ளனர். இந்த ஏரிகளை பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் "ஏரி வாரியம்", "ஏரி பட்டி" என்ற பல ஏற்பாடுகளை செய்து வைத்திருந்தனர். இதனால் இந்த நீர் வேளாண்மைக்கு பயன்படுவது மட்டுமின்றி நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கும் காரணமாக இருந்தது. ஆனால் பின்னர் வந்த ஆட்சியாளர்கள் ஏரிகளை முறையாக பராமரிக்கவும் பாதுகாக்கவும் தவறிவிட்டனர். இதனால் பல ஏரிகள் குடியிருப்புகளாகவும்,நகரங்களாகவும், பேருந்து நிலையங்கள், அரசு கட்டடங்களாகவும் மாறிவிட்டன. இதே நிலை தான் பல ஆறுகளுக்கும் ஏற்பட்டுள்ளது. நல்ல நீர் ஓடிய பல ஆறுகளில் இன்றைக்கு சாக்கடை கழிவுகள்,சாயப்பட்டறை கழிவுகள்,தோல் தொழிற் சாலைக் கழிவுகள் ஓடும் ஆறுகளாக இவை மாறிவிட்டது. அப்படி என்றால் குடிப்பதற்கும், விவசாயத் திற்கும்,தொழிற்சாலைகளுக்கும் நல்ல தண்ணீருக்கு நாம் எங்கே போவது?



பருவமழை காலத்தில் ஆண்டுதோறும் நமக்கு கிடைக்கும் 830 டிஎம்சி நீரும், அண்டை மாநிலங் களில் இருந்து கிடைக்கும் 430 டிஎம்சி நீரும் நமக்கு போதுமானது அல்ல. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மிக மிக குறைவு. நாட்டில் நீர் வளத்தில் மிகவும் பின்தங்கியுள்ள ராஜஸ்தான் மாநிலம் தான் நமக்குப் பின்னால் உள்ளது என்பது எவ்வளவு பெரிய எச்சரிக்கை, ஆனாலும் நமது மாநிலம் இன்னும் விழிப்படைய இல்லை. நீர்வளத்தை பாதுகாப்பதில் அக்கறை கொள்ளவில்லை. நீர் வளத்தின் அவசியத்தையும் அவசரத்தையும் நமக்கு உணர்த்துவதற்காக தான்' நீரின்றி அமையாது நிலவளம் 'என்கிற இந்த நூலினை முனைவர் பழ. கோமதிநாயகம் அவர்கள் எழுதியுள்ளார். அனைவரும் இந்நூலை வாங்கிப் படிக்க வேண்டும் – சமரன்

**நூலாசிரியர் : முனைவர் பழ.கோமதிநாயகம்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை–14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 200 விலை : ரூ.150**

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்


## உக்ரைன் போர்:

# அயல்நாடுகளைத் தேடித் செல்லும் இந்திய மாணவர்கள்

இந்தியக் கல்வித்துறையில் மாணவர் சேர்க்கை தொடர்பான நடைமுறைகள் சிக்கல்கள் மிகுந்து இருப்ப தாலும், விண்ணை முட்டும் அளவிற்கு மருத்துவக் கல்விக் கட்டணம் உயர்ந்து வருவதால் ஒவ்வொரு ஆண்டும் இந்திய மாணவர்கள் மருத்துவக் கல்விக்காக சீனா, ரஷ்யா, உக்ரைன், வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயச் சூழல் நிலவி வருகிறது.

இந்திய மாணவர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, அயல்நாடுகளுக்கு படிப்பதற்காகச் சென்ற மாணவர்களை இந்திய அரசாங்கம் குறை கூறு கிறது. போர் நடைபெற்றுவரும் உக்ரைன் நாட்டில் சிக்கிக் கொண்டிருக்கும் இந்திய மாணவர்களைப் பாதுகாப்பதில் இந்திய அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது. அரசாங்கம் அதன் தோல்வியை மூடி மறைப்பதற்காகவே பிரச்சனையைத் திசை திருப்புகிறது.

உக்ரைன் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் எம்.பி .பி.எஸ் மருத்துவப் படிப்புக்கு 20 முதல் 25 லட்ச ரூபாய் கல்விக் கட்டணம் ஆகும். ஆனால், இந்தியாவில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளில் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது.



எம்.பி.பி.எஸ் மருத்துவப் படிப்புக் கான கட்டணம் குறைவாக இருப்பதால் இந்திய மாணவர்கள் உக்ரைன் நாட் டுக்குச் செல்கிறார்கள். மருத்துவப் படிப்புக்கான செலவு மிகக் குறைவாக இருப்பதால் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் உக்ரைன் நாட்டுக்குச் செல்கிறார்கள் என்று வலைத்தளம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. மேலும், உக் ரைன் நாட்டு மருத்துவப் படிப்பு, உலக சுகாதார நிறுவனம், ஐரோப் பிய கவுன்சில் உள்ளிட்ட இதர சர்வதேச அமைப்புகளால் அங் கீகரிக்கப்படுகிறது. உக்ரைன் மட்டுமின்றி சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடு களுக்கும் இந்திய மாணவர்கள் மருத்துவ படிப்பை மேற்கொள்ளச் செல்கிறார்கள்.

ஒன்றிய அரசாங்கத்தின் நிதி நிலை அறிக்கையில் சுகாதாரத் துறைக்கான அறிவிப்புகள் பற்றிய இணையவழி கருத்தரங்கை பிப்ரவரி 26 அன்று பிரதமர் மோடி தொடங்கிவைத்துப் பேசுகையில், உக்ரைன் நாட்டில் உள்ள இந்திய மாணவர்களின் சூழலைப் பற்றி நேரடியாகக் கருத்துத் தெரிவிக்காமல், கல்வி கற்பதற்காக, குறிப்பாக மருத்துவக் கல்வி பயிலுவதற்காக இந்திய மாணவர்கள் சிறிய நாடுகளுக்குச் செல்லுகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். மொழி ஒரு பிரச்சனையாக இருந்தாலும் கூட மாணவர்கள் அங்கு செல்லுகிறார்கள். நமது மருத்துவக் கல்வித்துறையில் தனியார்கள் மிகப்பெரிய அளவில் பங்கேற்க இயலாதா? நமது மாநில அரசாங்கங்கள் இதற்காக நிலம் ஒதுக்கீடு செய்வது உள்ளிட்ட அம்சங்களுக்கான கொள்கைகளை வகுத்திட இயலாதா? என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி 1000 நோயாளிகளுக்கு 1 மருத்துவர் என்ற விகிதாசாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஆனால், நமது நாட்டில் 1655 நோயாளிகளுக்கு ஒரு மருத்துவர் என்ற நிலைமை நீடிப்பது எம்.பி.பி.எஸ் மருத்துவப் படிப்புக்கான இடங்களில் பற்றாக்குறை நிலவுவதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்தக் குறைபாட்டைக் களைந்திட அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வரும் அதே நேரத்தில், இந்தியாவில் மருத்துவக் கல்வித்துறையை ஒட்டுமொத்தமாக மறுஆய்வு செய்திட வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. நமது நாட்டில் உள்ள 562 மருத்துவக் கல்லூரிகளால் உரிய தரத்தை அடைய முடியவில்லை. இந்தியாவில் மருத்துவப் படிப்புக்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதும், மருத்துவக் கல்லூரிகளில் இடங்களும் குறைவாக இருப்பதால்தான் இந்திய மாணவர்கள் மருத்துவப் படிப்பிற்காக அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுக்குப் பறந்துவிடுகிறார்கள்.

இந்தியாவில் சுமார் 84,000 எம்.பி.பி.எஸ் இடங்கள் உள்ளன. ஆனால், 2021 ஆம் ஆண்டு இந்த இடங்களை நிரப்புவதற்காக நடைபெற்ற ழிணிணிஜி தேர்வுக்கு 16 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய் திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதிக வருமானத்திற்காக திறமை வாய்ந்த மருத்துவர்களும் செவிலியர்களும் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். அமெரிக்காவில் உள்ள மருத்துவர்களில் 10% க்கும் அதிகமானோர் இந்தியாவைச் சார்ந்தவர்கள் ஆவர். இங்கிலாந்து நாட்டில், தேசிய சுகாதார சேவையில் தற்போது 20,000 இந்திய மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இந்தியாவில் படித்து தேர்ச்சிபெற்ற மருத்துவர்களுக்கான தேவை உலக அளவில் அதிகரித்து வருவதும், உள்நாட்டில் மருத்துவர்கள் குறைபாடு அதிகரித்து வருவது ஒரு மாபெரும் பிரச்சனையாக உருவாகி இருக்கிறது. எனவே, மருத்துவக் கல்வித்துறை மீது கவனம் செலுத்த வேண்டியது கட்டாயம் ஆகும்.

**2014 ஆம் ஆண்டில் இருந்து 2020 ஆம் ஆண்டு வரை, மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 381 ல் இருந்து 562 ஆக அதிகரித்து உள்ளது. எம்.பி.பி.எஸ் இடங்களின் எண்ணிக் கையும் 54348 ல் இருந்து 84649 ஆக உயர்ந்துள்ளது. மருத்துவ மேற்படிப்புக்கான இடங்களும் 30191 ல் இருந்து 55595 ஆக உயர்ந்துள்ளது..**

இளங்கலை மருத்துவப் படிப்புக்கான இடங்கள் அதிகரித் திருந்தாலும், இந்தியாவின் பெரும் பாலான மக்கள் திரளுக்கு, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் போதிய மருத்துவ சேவையை வழங்குவதில் சுகாதாரத்துறை தோல்வியடைந்திருக்கிறது.

இந்தியாவில் மருத்துவப் படிப்புக்கான செலவு அதிகமாக இருப்பது கவலைக்குரிய விஷயம் ஆகும். தனியார் கல்லூரிகள் நிர்ண யித்துள்ள கட்டணம் அதிகமாக இருப்பதால், தகுதியுடையவர்களாக இருப்பினும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேர முடியாத சூழல் ஏற்படுகிறது. எனவே தான், 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே தேசிய மருத்துவ ஆணையம் கல்விக் கட்டணம் தொடர்பான ஒழுங்குமுறைகளை அறிவித்தது.

மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில் நிலவும் சிக்கல்கள் மற்றும் அதிக கட்டணம் ஆகியவை முறை கேடுகள் நிகழ்வதற்கு காரணமாக இருப்பதோடு, ஒவ் வொரு ஆண்டும் சுமார் 10000 மாணவர்கள் சீனா, ரஷ்யா, உக்ரைன் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளுக்குச் சென்றிடும் சூழலை உருவாக்குகிறது.

குறைந்த கல்விக் கட்டணம், தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களில் முறைகேடுகளைக் களைவது, கல்வித் தரத்தை உறுதிப்படுத்துவது, மருத்துவக் கல்வி இடங்களை அதிகரிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் இந்தியாவின் மருத்துவ சேவை தொடர்பான தேவைகளை நிறைவு செய்திடும் என்பதோடு இதர உலக நாடுகளுக்கும் மருத்துவ சேவைகளை வழங்கும் வாய்ப்புகளை உருவாக்கும்.

## பொருளாதார வன்முறை:

# ஆக்ஸ்பேம் அறிக்கை கூறுவது என்ன?



பணக்காரர்கள் மேலும் செல்வச் செழிப்பைப் பெறுகிறார்கள்; ஏற்றத்தாழ்வு ஏழைகளை வதைக்கிறது என்று ஆக்ஸ்பேம் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது. ஆக்ஸ்பேம் அமைப்பு, இங்கிலாந்து நாட்டை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ஒரு தொண்டு நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் அண்மையில் சமத்துவம் வதைக்கிறது **(Inequality Kills)** என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இதுவரை இல்லாத அளவிற்கு ஏற்றத்தாழ்வு உருவாகி இருப்பதாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் பொருளாதார ஏற்றத்தாழ்வு பட்டினிச் சாவுகள், சுகாதார வசதிகள் இல்லாமை, பண நெருக்கடி காரணமாக உண்டாகும் பாலின அடிப்படை யிலான வன்முறைகள் ஆகியவற்றுக்கு காரணமாக இருக்கிறது. இந்த விளைவுகளைப் பற்றிக் குறிப்பிட பொருளாதார வன்முறை **'Economic Violence'** என்ற சொல்லாடல் அறிஞர்கள் மட்டத்தில் பயன்படுத்தப்படுகிறது.

# போரில்லா உலகம் வேண்டும்!





சி.மகேந்திரன்

**போரில்லா உலகம் மானுடத்தின் நெடுங்கனவு. போரிட்டுப் போரிட்டு அழிவில் துயருற்ற மானுடம், போர் வேண்டாம் என்கின்ற குரலைக் காலந்தோறும் உயர்த்தியே வந்திருக்கிறது. ஆனாலும், போர் நிற்கவில்லை. எத்தனை முயற்சிகள் எடுத்தாலும் இதிலிருந்து விடுபட முடிவதில்லை. ரஷ்ய உக்ரைன் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், பேச்சுவார்த்தையின் வாயிலாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற குரல் உலகம் முழுவதும் தீவிரமாக எழுந்துள்ளது. இந்தப் போர் தொடர்பான விவாதங்களில், அது தோன்றியதற்கான காரணங்களும் முக்கியமானதாகத் தோன்றுகிறது.**

முதல் உலகப் போர் முடிந்த பின்னர், போர்கள் நடைபெறுவதைத் தடுக்க, உலகில் முதன்முறையாக உருவாக்கப் பட்டதுதான் உலக நாடுகள் சங்கம் (League of Nations). ஒரு கட்டத்தில் இந்த அமைப்பு, உலக ஆதிக்கச் சக்திகளால் முடமாக்கப்பட்டது. இந்த அமைப்பை நோக்கி 'குருவிகளின் சண்டையைத் தீர்ப்பதற்கு உலக நாடுகளின் சங்கம் பயன் படலாம். தீவிரம் கொண்ட கழுகுகளைச் சங்கத்தால் என்ன செய்துவிட முடியும்' என்று கேள்வி எழுப்பியவர்தான் இரண் டாவது உலகப் பெரும்போருக்குக் காரணமான மூன்று பேரில் ஒருவரான முசோலினி.

இரண்டாம் உலகப் பெரும்போர், உலகைத் தீப்பிடித்து எரிய வைத்தது. ஐந்து கோடிக்கும் அதிகமான மக்கள் இறந்து போனார்கள். யாருமே நினைத்துப் பார்க்காத தீமை நிறைந்த அணு குண்டு என்னும் பேரழிவு முதன்முறையாகப் பூமியின் மீது விழுந்தது. இப்படியொரு போர் இனி வேண்டாம் என்று மனித சமுதாயமே கதறியழுதது. முடிவில், நிலையான அமைதியை நிலைநாட்டுவதாக ஐக்கிய நாடுகள் அவையும் பிறப்பெடுத்தது.

உலகப் பெரும்போர் இல்லை என்றாலும் போர் மேகங்கள் சூழ்ந்தே இருந்தன. அது பனிப்போர் அல்லது மறைமுகக் கெடுபிடி யுத்தம் என்று அழைக்கப்பட்டது. ராணுவ வெடிப்பு, பூமியின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்து, பெரும் அழிவை உருவாக்கும் பருவநிலை மாற்றங்களையும் இயற்கைப் பேரிடர்களையும் நிகழ்த்தின. வழக்கம்போல் ஊர்க்குருவிகளைத்தான், ஐக்கிய நாடுகள் சபையால் கட்டுப்படுத்த முடிந்தது. கழுகுகள் தங்கள் கூரிய நகங்களைக் காட்டி தொடர்ந்து உலகத்தையும் ஐக்கிய நாடுகள் அவையையும் அச்சுறுத்தி வந்தன.

இரண்டாம் உலகப் பெரும்போருக்குப் பிந்தைய யுத்த அபாயங்களை ஆராய்ந்து பார்ப்பது இப்போது மிகவும் அவசியமாகிவிட்டது. ஆனால், இது பற்றிய விவாதங்கள் உள்நோக்கம் கொண்டவையாகவும் சில சமயங்களில் இருக்கின்றன. தற்போது நடக்கும் போருக்கு அடிப்படைக் காரணம், அமெரிக்கத் தலைமையில் இயங்கும் நேட்டோ என்னும் ராணுவக் கூட்டமைப்பு என்பதற்கு உரிய கவனம் கொடுக்கப்படுவதில்லை.

'உக்ரைன் மக்களுக்கும் எங்களுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. நோட்டோதான் பிரச்சினை' என்கிறது ரஷ்யா. சோவியத் ஒன்றியம் பல கூறுகளாகப் பிரிந்து சென்றபோது, 16 நாடுகள் அதிலிருந்து வெளியேறி, சுயவிருப்பத்தோடு தங்களுக்கான தனி நாடுகளை அமைத்துக்கொண்டன. இதில் சில நாடுகள் பின்னர் நேட்டோ ஆதரவு நாடாக மாறின. அந்த நாடுகளின் மீது ரஷ்யா எந்தப் படையெடுப்பையும் நிகழ்த்த வில்லை. அதனால், தங்கள் பாதுகாப்புக்கு எந்த ஆபத்தும் இல்லை என்பதை ரஷ்யா இப்போதும் கூறுகிறது. ஆனால், உக் ரைனை அவ்வாறு பார்க்க முடியாது என்பது ரஷ்யாவின் வாதம்.

ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோ, உக்ரைன் தலைநகர் கீவ் ஆகிய இரண்டுக்கும் இடையில் உள்ள தொலைவு 700 கிமீ. உக்ரைன் எல்லையில் அணு ஆயுதம் உள்ளிட்ட ராணுவ தளத்தை அமைத்தால், அது ரஷ்யாவுக்கு நிரந்தர அச்சுறுத்தலாக அமையும். அதனால்தான், 'எங்கள் கழுத்துக்கு அருகில் கத்தி தொங்கிக்கொண்டிருக்கிறது' என்கிறது ரஷ்யா.

உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலென்ஸ்கி நேட்டோவின் கைப்பாவையாகிவிட்டார் என்பதுதான் ரஷ்யாவின் குற்றச்சாட்டு. இவர் தொடர்ந்து அரசியலில் செயல்பட்டவர் அல்லர். ஒரு நகைச்சுவை நடிகராகப் புகழ்பெற்றிருந்த இவரை, உள்நாட்டில் ஒரு குழப்பத்தை உருவாக்கி, அமெரிக்க ஆதரவு அதிபராகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். உக்ரைனில் ரஷ்ய மொழி பேசும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில், 15 ஆயிரம் பேர் இவரது ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்டதாகவும் இவர் மீது ஒரு குற்றசாட்டு வைக்கப்பட்டுள்ளது.

மற்றொன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் அவையில் ரஷ்யாவுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் வந்தபோது சீனா, இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவிக்காமல் நடுநிலை வகுத்தன. இதற்கான காரணங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். காகசஸஸ் மலையும், கருங்கடலும் இணைந்த இந்தப் பிரதேசம், ஆசியஐரோப்பிய நாடுகளில் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகக் கருதப்படுகிறது. நேட்டோவின் அதாவது அமெரிக்காவின் ஆயுதத் தளமாக இது மாறுவது தங்களுக்குப் பெரும் ஆபத்து என்று சீனாவும், ஐக் கிய அரபு அமீரகமும் நினைக்கிறது. இந்தியாவுக்கு வேறு காரணங்களும் இருக்கலாம்.

நேட்டோ என்பது என்ன, அதன் இன்றைய தேவைதான் என்ன என்ற கேள்வி ரஷ்யஉக்ரைன் போர்ப் பின்னணியில் தீவிரமாக எழுந்துள்ளது. ஒரு காலத்தில், சோஷலிஸ நாடு களின் கூட்டணியாக வார்சா இருப்பதால் நாங்கள் செயல் படுகிறோம் என்று பதிலளித்தது நேட்டோ. 1990க்கு பின், வார்சா செயல் படவில்லை. பிறகு, 'நேட்டோ' ஏன் இன்னும் தொடர வேண் டும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

**அமெரிக்கா தனது ராணுவ மேலாதிக்கத்தை உலகெங்கும் நிறுவிக்கொள்வதற்கு நேட்டோ ஒவ்வொரு நாட்டிலும் மறை விடங்களை உருவாக்கித்தருகிறது. இதைப் போலவே, அதன் துணையோடு மிகப் பெரிய அளவில் ஆயுத வியாபாரமும் நடைபெறுகிறது. உலகின் மறுபுறத்தில் பசியாலும் நோயாலும் மக்கள் துயரத்தின் எல்லைக்கே சென்றுகொண்டிருக்கிறார்கள்.**

இந்நிலையிலும், உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு, அங்கு அமைதியை ஏற்படுத்துவதாகக் கூறித் தனது ராணுவ அதிகாரத்தை நிறுவ முயலும் எந்த வொரு ராணுவக் கூட் டணியும் இனியும் தொடரக் கூடாது. ஐக்கிய நாடுகள் அவையே போதுமானது. அதை இன்னும் பலப்படுத்தினாலே போது மானது. உக்ரைன் மீதான போரை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது. உக்ரைனின் இறையாண்மைக்கும் எல்லைப் பாதுகாப்புக்கும் மதிப்பளித்து, இரண்டு நாடுகளும் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும்.

தொடர்புக்கு: **94441 16087**

நன்றி : *இந்து தமிழ் திசை*

## ஏஐடியூசி கட்டட கட்டுமான
## பெண் தொழிலாளர்கள் அமைப்பு பேரவை

மதுரை அழகர்கோவிலில் மாவட்ட அளவிலான கட்டட கட்டுமான பெண்களுக்கான பேரவை கூட்டம் நடைபெற்றது.

இந்த பேரவை கூட்டத்தை தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர்கள் சங்க பொருளாளரும், மாவட்ட செயலாளருமான இரா.முருகன், கட்டட சங்கத்தின் மாவட்ட தலைவர் இருளாண்டி வழிநடத்தினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளரும், ஏஐடியூசி மாவட்ட தலைவருமான எம்.எஸ்.முருகன் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார். இதில் இஸ்கப் மாவட்ட குழு பா.சுமதி, கட்டட சங்க நிர்வாகிகள்... அலெக்ஸ், நாராயணன், ஜனசக்திஎன்ஜீவா உட்பட தோழர்கள் பங்கேற்றனர்.


















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 12.03.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57



# சர்வதேச பெண்கள் தினம்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து

**உலகெங்கும் வாழ்ந்து வரும் உழைக்கும் பெண்கள் ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் தேதியை சர்வதேச பெண்கள் தினமாக கடைப்பிடித்து வருகிறார்கள். இந்த ஆண்டு "நீடித்த தொடர் வளர்ச்சிக்காக பாலின சமத்துவம் காண்போம்" என்ற முழக்கத்தை முன்வைத்துள்ளனர்.**

கடந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1908) அமெரிக்க நாட்டின் நியூயார்க் நகரில் ஆயத்த ஆடைத் தயாரிப்பு பெண் தொழிலாளர்கள் வேலை நிலமைகளை மேம்படுத்தவும். வேலை நேரத்தை முறைப்படுத்தவும் கோரிக்கைகளை முன்வைத்து முதன் முதலாக வேலைநிறுத்தம் செய்தனர். இதன் நினைவாக ஆண்டுதோறும் பெண்கள் உரிமைகள் தினமாக சில நாடுகளில் உழைக்கும் பெண்கள் கடைப்பிடிக்க தொடங்கினர். இது நவம்பர் புரட்சி வெற்றியை தொடர்ந்து சோவியத் யூனியன் அமைந்ததும் சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடப்பட்டது. ஐக்கிய நாடுகள் அவை 1977 ஆம் ஆண்டு முதல் பெண்கள் தினத்தை கொண்டாடி வருகிறது.

உழைக்கும் பெண்கள் உரிமைகளுக்காக நடத்திய போராட்டத்தில் வியக்கத்தக்க சாதனைகள் படைத்துள்ளனர். திறமையில், ஆற்றலில். அறிவார்ந்த செயலில் "ஆணுக்கு பெண் இங்கே, இளைப்பில்லை காண்" என்பதை வாழ்க்கை முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பெண் உரிமைக்கான போராட்டம் சமுக நீதியை நிலை நாட்டியுள்ளது. தேவதாசி முறை ஒழிப்பு, சொத்துக்களில் சம உரிமை, கல்வி கற்பதற்கு ஊக்கம் தரும் திட்டங்கள் என முன்னேறி, அண்மையில் நடந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமாக பெண்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த ஜனநாயக புரட்சி அடுத்த கட்டம் நோக்கி முன்னேறி செல்ல வேண்டும்.

பாஜக தலைமையிலான ஒன்றிய அரசும், அதன் ஆதரவுப் பரிவாரங்களும் பெண்களை பிள்ளை பெறும் எந்திரமாகவும், ஆண்களின் உபயோகப் பொருள்களில் ஒன்றாகவும் கருதியும், பேசியும் வருகின்றனர்.

மோடி ஆட்சி அமைந்து ஏழாண்டுகள் ஆகியும் சட்டமன்றங்களிலும். நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு மறுக்கப்பட்டு வருகிறது. பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் நிலைத்த நீடித்த வளர்ச்சிக்கு, பாலின சமத்துவம் காண்போம் என்ற முழக்கத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்று, ஆதரிக்கிறது இது தொடர்பாக இயக்கங்களையும் முன்னெடுக்கும் என உறுதியளிக்கிறது. சர்வதேச பெண்கள் தினத்தில் (மார்ச் 8) இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தாய்மார்கள், உழைக்கும் பெண்கள், பெண் குழந்தைகள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



## இஸ்லாமிய மக்களுக்கு இலவச பட்டா கோரி ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி நகர பகுதியைச் சேர்ந்த ஏழை, எளிய இஸ்லாமிய மக்களுக்கு இலவச பட்டா கோரி தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மார்ச் 9 அன்று வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் நடைபெற்றது.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் அ.ரகமத்துல்லா தலைமை தாங்கினார். இ.சுப்பிரமணி, அ.ஆரிப், பி.முனிசாமி, டி.எம்.ரசூல். ஸ்ரீசயர் (திருமலை) ஆர். விஜயன், கே.சையத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் வே.முத்தையன் கண்டன உரையாற்றினார்,

தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் மாவட்ட செயலாளர் இரா.தங்கராஜ்,

ஒடுக்கப் பட்டோர் வாழ்வுரிமை இயக்க கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன், மாவட்ட தலைவர் ஆர்.மோகன்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் இஸ்லாமிய மக்களுக்கு பட்டா வழங்கவில்லை என்றால் தாலுகா அலுவலகத்தில் குடிபெயர்வும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


அதிகாரத்தை பரவலாக்குவோம் உள்ளாட்சியில்...

அரசியல் அதிகாரமே, சமூக விடுதலை

திமுக தலைமையிலான முற்போக்கு கூட்டணியில்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்கள்



பவானி நகரமன்ற துணைத்தலைவராக தோழர் C.மணி

20வது வார்டு தோழியர் G.கல்பனா

ஜம்பை பேரூராட்சி 14வது வார்டு தோழியர் A.சுபிதா பேகம்



ஆகியோர்களுக்கு வாக்களித்த மக்களுக்கும், வெற்றிக்காக உழைத்த கூட்டணிக் கட்சி தோழர்களுக்கும்,

புரட்சி கர வாழ்த்துக்களுடன்

நன்றி! நன்றி!! நன்றி!!!

இவண்

இந்திய கம்யூனிட்ஸ் கட்சி,

பவானி நகர ஒன்றியம்.


Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.